# உதயன்

விலை ரூபா 8.00

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 02 புதன்கிழமை (14-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily


சபாநாயகர் தெரிவு:

## எதிர்க்கட்சி வேட்பாளருக்கே தமிழ்க் கூட்டமைப்பு ஆதரவு

யாழ்ப்பாணம்,ஏப்.14

புதிய சபாநாயகர் தெரிவில் எதிர்க் கட்சி நிறுத்தும் வேட்பாளருக்கே தமிழ்க் கூட்டமைப்பு ஆதரவு வழங்க வுள்ளது. கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் இதனைத் தெரிவித் தார்.

ஐக்கிய தேசிய முன்னணி சார் பில் சபாநாயகர் வேட்பாளராக நிறுத் தப்படவுள்ள லொக்கு பண்டாரவுக்கு ஆதரவு வழங்குவீர்களா எனக் கேட்ட போது அவர் அதனை ஆதரித்தார்.

"அமைய இருக்கும் புதிய அர சுக்கோ, எதிர்க்கட்சியில் இருக்கும் ஐ.தே.முன்னணிக்கோ எமது கட்சி ஆதரவு வழங்கப்போவதில்லை. எனி னும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக கூட்டமைப்பு எம்.பிக்கள் கூடி ஆராய்வர்

யாழ்ப்பாணம்,ஏப்.14


எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளு மன்றம் கூடும்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் தமது எதிர்காலச் செயற்பாடுகள் என் பன குறித்து தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொழும் பில் கூடி ஆராயவுள்ளனர்.

கூட்டத்தில் கலந்துகொள்ள வசதி யாக கூட்டமைப்பின் சகல நாடாளு மன்ற உறுப்பினர்களையும் நாளை கொழும்புக்கு வரும்படி கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அழைப்பு அனுப்பியுள் ளார்.

சபாநாயகர் தெரிவு மற்றும் விடு தலைப் புலிகளின் தலைமையுடனான சந்திப்புப் போன்ற விடயங்கள் குறித் தும் இக்கூட்டத்தில் ஆராய்ந்து இறுதி முடிவுகள் எடுக்கப்பட இருக்கின்றன என்று மாவை சேனாதிராசா தெரிவித தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பகுதியில் கருணா இல்லை; மீட்பு அணிகள் நேற்று உறுதிப்படுத்தின



நேற்று விடுவிக்கப்பட்ட விடுதலைப் புலிப் போராளிகள் இருவர் அவர்களது பெற்றோர்களால் பொறுப்பேற்கப்பட்டபின்னர்...

## சல்லடை போட்டுத் தேடிய பின் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஏப்ரல்14

**கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறையில் விடுத லைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எங் கும் கருணா இல்லை என்று புலிகளின் மீட்பு அணித் தளபதிகள் நேற்று உறுதிப்படுத்தினர். மீட்கப்பட்ட பகுதிகளில் சல்லடைபோட்டுத் தேடுதல்களை நடத்திய பின்னர் அவர்கள் இதனை உறுதிப் படுத்தினர். ஆயுதக் களஞ்சியங்கள் சில அப்படியே இருக்கின்றன என்றும் மோட்டார்கள் மற்றும் துப் பாக்கிகள் அங்கு இருக்கின்றன என்று தாம் கருதுகின்றனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.**

விடுதலைப் புலிகளின் மீட்பு அணி ச ர் தமது நடவடிக்கைகளைத் தீவி ரபடுத்தியதை அடுத்து தப்பியோடிய கருணாவும் அவரது ஆதரவாளர்கள் சிலரும் தொப்பிகல காட்டுப் பகுதியை நோக்கிச் சென்றனர் என்று கூறப்பட் டது.

மட்டு. - அம்பாறைப் பகுதிகளை மீட்ட விடுதலைப் புலிகளின் அணி கள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங் கள் அனைத்திலும் தீவிர தேடுதல் களை நடத்தின. காட்டுப் பகுதிகளி லும் தேடுதல்கள் நடத்தப்பட்டன. எனி னும், எங்கும் கருணாவோ அவரது ஆதரவாளர்களோ இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மீனகம் தளத்தில் சில வாகனங்கள் எரியூட் டப்பட்ட நிலையில் கிடந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பல்வேறு பொருள் களும் ஏற்றி அரைவாசி நிரப்பப்பட்ட நிலையில் கைவிடப்பட்ட வாகனங் கள் சிலவற்றையும் அவர்கள் கைப் பற்றியுள்ளனர்.

கருணாவின் நெருங்கிய ஆதரவா ளர்கள்கூட எவரும் தமது கட்டுப் பாட்டுப் பிரதேசத்துக்குள் இல்லை என்று மீட்பு அணிகளின் தளபதிகள் தெரிவித்தனர்.

கருணாவும் அவரது சகாக்கள் சில

(10ஆம் பக்கம் பார்க்க)

### களுவாஞ்சிக் கேணி கடற்கரையோரம் 3 சடலங்கள் மீட்பு

மட்டக்களப்பு,ஏப்.14

மட்டக்களப்பு, களுவாஞ்சிக் கேணிக் கடற்கரையோரம் துப்பாக் கிச் சூட்டுக்காயங்களுடன் மூன்று சட லங்களை நேற்று செவ்வாய்க்கிழமை ஏறாவூர் பொலிஸார் கண்டெடுத்துள் ளனர்.

கைகள், கால்கள் கட்டப்பட்டு வாய்க்குள் துணிகள் திணிக்கப்பட்ட நிலையில் புதை குழியிலிருந்து இச் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட சடலங்களில் ஒன்று களுவாஞ்சிக் கேணியைச் சேர்ந்த மாணிக்கவேல் சபாரட்ணம் என்பவரு டையது என அடையாளம் காணப் பட்டுள்ளது. (ம-9)

### விசேட அதிரடிப் படைக்கு 5 கவச வாகனங்கள்

கொழும்பு,ஏப்.14

இலங்கை இராணுவத்தின் மின் னியல் மற்றும் பொறியியல் துறை யினரால் உள்ளூரிலேயே உருவாக் கப்பட்ட துருப்புக்காவி கவச வாக னங்கள் (பவள்) ஐந்து, நாளை விசேட அதிரடிப்படையினிடம் ஒப் படைக்கப்படவுள்ளன.

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் 269 போராளிகள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

கிளிநொச்சி,ஏப்.14

மட்டக்களப்பு - அம்பாறைப் பிர தேசம் விடுதலைப் புலிகளினால் கருணா தரப்பிடமிருந்து மீட்கப்பட்டதை அடுத்து 18 வயதுக்குக் குறைந்த 168 பேர் உட்பட 269 போராளிகள் அவர்களது சுய விருப்பின் பேரில் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள னர் என்று விடுதலைப் புலிகளின் தலைமை அறிவித்துள்ளது.

மீட்புப் படையணிகளுடன் இணைந்து கொண்ட 33 பெண் போராளிகளும் 68 ஆண் போராளி களும் நேற்றுக் காலை 7.00 மணி யளவில் கதிரவெளிப் பாடசாலையில் வைத்து அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

ரட்ணசிறி, அனுருத்த, மேர்வின் சில்வா பதவியேற்க வசதியாக

## சுதந்திரக் கூட்டமைப்பின் 3 எம்.பிக்கள் பதவிகளை இராஜினாமாச் செய்வர்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் தேசியப்பட்டியல் மூலம் தெரிவான எம்.பிக்கள் மூவர் தமது பதவிகளை இராஜினாமாச் செய்ய விருக்கின்றனர்.

முன்னாள் பிரதமர் ரட்னசிறி விக் கிரமநாயக்க, முன்னாள் பிரதிப் பாது காப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த மற்றும் மேர்வின் டி சில்வா ஆகி யோருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை வழங்குவதற்காகவே இவர் கள் பதவி விலகுகின்றனர்.

நாடாளுமன்றம் எதிர்வரும் 22 ஆம திகதி கூடும்போது கூட்டமைப்புச் சார்பில் ஜனதாஸ பீரிஸ், ஈ.ஏ.டி.சி. வீரசேகர, மேரி லூசிய ஆகியோர் சத்தியப்பிரமாணம் செய்வர்.

பின்னர் ஜனதாஸ பீரிஸ், ரட்ன சிறி விக்கிரமநாயக்காவுக்காகவும், வீரசேகர அனுருத்த ரத்வத்தைக்காக வும் மேரி லூசிய தனது கணவரான மேர்வின் டி சில்வாவுக்காகவும் பதவி களை ராஜினாமாச் செய்வர்.

ரட்னசிறி விக்கிரமநாயக்க சுதந் திரக் கூட்டமைப்புச் சார்பில் சபாநாய கர் பதவிக்குப் போட்டியிட இருக் கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




நான் உங்கள் புத்தாண்டு. உங்களுக்கொரு அன்பளிப்பு வைத்திருக்கின்றேன்.

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

உங்களுக்கு வெற்றிகரமான ஆரம்பம். ரூ.50,000 அல்லது அதற்கு மேலதிகமான தொகையை கால வைப்புச் செய்பவர்களுக்கு, தேசிய சேமிப்பு வங்கி விசேட அன்பளிப்பை வழங்குகிறது. 2004 ஏப்ரில் 14 - 21 வரை மட்டுமே இச்சலுகை. ஏப்ரில் 14ம் திகதியன்று வங்கியில் கொடுக்கல் வாங்கல் செய்பவர்களுக்கு இலவசமாக உண்டியலும் கைவிசேஷமும் வழங்கப்படும். உங்கள் குடும்பங்களும் அழைக்கப்படுகிறார்கள்.

NSB தேசிய சேமிப்பு வங்கி

# வெருகலிலிருந்து இடம்பெயர்ந்தோருக்கு நேற்று அரச நிவாரணம் வழங்கப்பட்டது

திருகோணமலை,ஏப்.14

வாகரை மற்றும் வெருகல் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து ஈச்சிலம்பத்தை தமிழ் மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ளவர்களுக்கு அரச நிவாரணம் நேற்று வழங்கப்பட்டது.

அங்கு தங்கியுள்ள 220 குடும்பங்களைச் சேர்ந்த 962 பேருக்கு அத்தியாவசியப் பொருள்களான அரிசி, மா, சீனி, பருப்பு போன்றவை வழங்கப்பட்டன.

இடம்பெயர்ந்த இந்த மக்களுக்குத் தேவையான உதவிகளை அரச சார்பற்ற நிறுவனங்களே இதுவரை வழங்கி வந்தன.

'யுனிசெவ்' மற்றும் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்று அங்கு சென்று மக்களின் நிலை குறித்துக் கேட்டறிந்தனர். (ம-3-187)

# பொலீஸ், ஊர்காவல் படையினர் தாக்கியதில் இருவர் படுகாயம்!

வவுனியா,ஏப்.14

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் பிணக்குத் தீர்க்கச் சென்ற பொலீஸாரும் ஊர்காவல் படையினரும் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவத்தில் பொதுமக்கள் இருவர் படுகாயமடைந்தனர். இது தொடர்பாக ஒரு பொலீஸ் கான்ஸ்டபிளும் ஊர்காவல் படையினர் இருவர் உட்பட நால்வர் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று மாலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இருதரப்பினரிடையிலான பிணக்கைத் தீர்க்கச்சென்ற பொலீஸ் மற்றும் ஊர்காவல் படையினர் ஒரு தரப்பினரைத் தாக்கினர் என்று கூறப்படுகின்றது. இதில் 60 வயதான முதியவர் ஒருவரும் 13 வயதுச் சிறுவன் ஒருவனும் படுகாயமடைந்தனர். தலை மற்றும் உடம்பில் வெட்டுக் காயங்களுடன் இவர்கள் வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலீஸார் தாக்கியதை அடுத்து அங்கு களேபரம் ஏற்படும் சூழல் உருவானது. வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வவுனியா பொலீஸ் நிலையத் தலைமையகப் பொறுப்பதிகாரி, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி ஆகியோர் சம்பவ இடத்துக்குச்சென்று பேசி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். (ம-164)

## தம்பாட்டி மக்கள் ஆயுததாரிகளால் மிரட்டப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஏப்.14

ஊர்காவற்றுறை,தம்பாட்டிக் கிராம மக்கள் ஆயுததாரிகள் சிலரால் நேற்று அச்சுறுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 3மணியளவில் பிஸ்ரலுடன் அங்கு சென்ற சிலர் மக்களை மிரட்டியுள்ளனர்.

இது தொடர்பாக மக்கள் ரெலோக் கட்சியின் முதல்வர் என்.ஸ்ரீகாந்தாவிற்கு தெரிவித்ததையடுத்து அவர் இது பற்றி யாழ். மாவட்ட உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் தயா செனிவிரத்தினவிடன் தொடர்பு கொண்டு பேசினார். ஈ.பி.டி.பியினரே இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டனர் என்றும் அவர் கூறினார்.

இதனையடுத்து ஊர்காவற்றுறைப் பொலீஸார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் இரண்டு உறுப்பினர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களின் அலுவலகத்தில், பணியாற்றும் ஒருவர் தாக்கப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களித்த மக்கள் தாக்கப்பட்டும், அச்சுறுத்தப்பட்டும் வருகின்றனர் என்றும் என். ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார். (ம-10)



விடுதலைப் புலிகளுக்கும் கருணா குழுவினருக்கும் இடையிலான மோதல்களைத் தொடர்ந்து இடம்பெயர்ந்திருந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் காட்சி.

# அமைதியான குதூகலத்துடன் நேற்று குடாநாட்டில் புத்தாண்டுக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.14

சித்திரைப் புத்தாண்டைக் குடாநாட்டு மக்கள் நேற்று அமைதியாகக் குதூகலத்துடன் கொண்டாடினார்கள்.

மாலை 4.35 மணிக்கு (புதிய நேரம்) 'தாரண' புதுவருடம் பிறந்த போதும் மக்கள் நேற்றுக்காலை முதலே ஆலயங்களில் மருத்துநீர் எடுப்பதிலும் நீராடுவதிலும் ஆலயங்களுக்குச் செல்வதிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

ஆலயங்களில் வருடப்பிறப்பையொட்டிய அபிஷேகங்கள் மற்றும் விசேட பூசைகள் என்பன பிற்பகல் வேளையில் ஆரம்பமாகி நடைபெற்றன. இவற்றில் மக்கள் கலந்துகொண்டு இறைவழிபாட்டில் ஈடுபட்டனர். புதுவருடம் பிறந்த நேரம் ஆலயங்களில் மணியோசை எழுப்பப்பட்டது.

புத்தாடை அணிந்து உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளுக்குச் சென்றும் இனிப்புப் பலகாரங்களைப் பரிமாறியும் மக்கள் புத்தாண்டை குதூகலத்துடன் கொண்டாடினர்.

பாட்டாசு கொளுத்தியும் மக்கள் தமது புத்தாண்டின் வருகையைக் கொண்டாடினார்கள். சில இடங்களில இரவு வேளையில் இளைஞர் குழுக்கள் வெடிகளைக் கொளுத்தித் தமது நண்பர்களுக்கு எறிவதையும் அயல் வீடுகளுக்கு முன்னால் எறிந்து விளையாடுவதையும் காணக்கூடியதாக இருந்தது.

புதுவருடப் பிறப்பான நேற்று மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில் ஆகியவற்றில் வருடாந்த மஹோற்சவத்தையொட்டிய இரதோற்ஷவம் இடம்பெற்றது.

மருதடி விநாயகரின் இரதோற்சவத்தைக் காணக் குடாநாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த அடியார்கள் ஆயிரக்கணக்கில் வருகை தந்திருந்தனர்.

காவடிகள் எடுத்தும் அங்கப் பிரதிஷ்டை செய்தும் கற்பூரச்சட்டி ஏந்தியும் அடியார்கள் தமது நேர்த்தியை நிறைவேற்றினர். (ம-10-15-ரி)

# புத்தரின் புனித தந்தம் மக்களின் அஞ்சலிக்கு

## நாட்டு நலனுக்காக

கொழும்பு,ஏப்.14

நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டி புத்தபிரானின் புனித தந்தம் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் முதலாம் திகதி வரையும் புனித தந்தத்துக்கு கண்டியில் மக்கள் அஞ்சலி செலுத்தமுடியும்.

நாட்டுக்கும் மக்களுக்கும் சமாதானமும், சுபீட்சமும் என்பன ஏற்படவேணடும் என்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வாறு வைக்கப்படவுள்ளதாக தலதா மாளிகையின் தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரட்ண தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பராம்பரிய முறைப்படி மக்களின் அஞ்சலிக்காக புனித தந்தம் வைக்கப்படும்.

அன்றையதினம் கண்டி மாவட்டத்தில் உள்ள மதுபான விற்பனை நிலையங்கள், இறைச்சிக் கடைகள் மூடப்பட்டிருக்கும். மக்களின் வசதி கருதி போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-10)

# கருணா கோரினால் அவருக்கு படையினர் பாதுகாப்பு அளிப்பர்

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவ்ப்பு

கொழும்பு,ஏப்.14

கருணா தனது பாதுகாப்புக்காக படைத்தரப்பிடம் கோரிக்கை விடுத்தால் அவருக்குத் தேவையான பாதுகாப்பைப் படையினர் வழங்குவார்கள். இத்தகவலை பாதுகாப்பு அமைச்சு செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்திருக்கிறார். நேற்றுச் செவ்வாய்க்கிழமை பி.பி.ஸி யின் தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அப்பேட்டியில சிறில் ஹேரத் மேலும் கூறுகையில் தெரிவித்ததாவது:-

இதுவரை கருணா குழுவிடம் இருந்து எமக்கு எந்தக் கோரிக்கையும் வரவில்லை. ஒருவேளை, அவர் அப்படி கோரிக்கைவிடுத்தால் அவருக்குப் படையினர் பாதுகாப்பளிப்பர். அதற்குப்பிறகு அவரை என்ன செய்வது என்ற முடிவு எடுக்கப்படலாம். கருணா குழுவினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சண்டையின் போது படையினர், கருணா குழுவுக்கு ஆதரவாகச் செயற்பட்டனர் என்று கூறுவதில் எவ்வித உண்மையும் இல்லை. இந்த நெருக்கடி நிலையின் போது படைத்தரப்பு கடுமையான நடுநிலைமையைக் கடைப்பிடித்தது. எந்தத் தரப்புக்கும் நாங்கள் ஆதரவு அளிக்கவில்லை. இன்னமும் அதுவே எங்கள் நிலைப்பாடு.

- இப்படி ஸ்ரீறில் ஹேரத் கூறினார். (ம-9)

# ஜனாதிபதியே சமாதானப் பேச்சை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்

## அஸ்கிரிய பீடாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.14

சமாதான நடைமுறைகளை முதலில் ஆரம்பித்தவர் என்ற முறையில் அவற்றை ஜனாதிபதியே முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று அஸ்கிரிய பீடத்தில், மகாநாயக்கர் அதி சங்கைக்குரிய உடுகம ஸ்ரீ புத்தரகித்த தேரோ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் செவ்வாயன்று காலை மகாநாயக்கரை சந்தித்தார். இச்சந்திப்பின் போதே மகாநாயக்கர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தற்போதைய அரசியல் நிலைமை குறித்தும் இந்த நிலைமையால் ஸ்ரீ.மு.காவின் நிலைப்பாடு குறித்தும் மகாநாயக்கருக்கு விளக்கிக் கூறும் முகமாகவே ரவூப் ஹக்கீம் தேரரை சந்தித்தார். அப்போது தேரர் மேலும் கூறியதாவது:-

அண்மையில் நடைபெற்ற தேர்தலில் இரு பிரதான கட்சிகளும் எதிர்பார்த்த எண்ணிக்கையிலான ஆசனங்களைப் பெறத் தவறியுள்ளன. கட்சிகள் ஓரளவு புரிந்துணர்வோடும் ஒருமைப்பாட்டோடும் செயற்படத் தவறினால் நாடு, இரண்டொரு வருடத்துக்குள் மற்றுமொரு பொதுத் தேர்தலை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

சமூகத்தின் சகல பிரிவினரும் வேறுபாடுகளை மறந்து நாட்டின் நலனுக்காக ஐக்கியப்பட்டுச் செயற்படுவது அவர்களின் கடமையாகும் - இப்படி மகாநாயக்கர் தெரிவித்தார்.

இதேவேளை - ஸ்ரீ.மு.க. பிரதிநிதிகள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஜாதிக ஹெல உறுமயவின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சங்கைக்குரிய உடவத்த நந்த தேரரையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். (ம-9)

# விளையாட்டு

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,ஏப்.14

ஜெனிவாவில் உள்ள இலங்கையர்கள் அமைத்துள்ள கிரிக்கெட் கழகத்துக்கும் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட 40 ஓவர்கள் கொண்ட ஆட்டம் இன்று காலை 10.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும். (ம)

## எல்லே போட்டி

வலி.வடக்கு,ஏப்.14

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கிடையே நடத்தப்பட்டுவரும் எல்லே விளையாட்டுப் போட்டியில் ஆண்கள், பெண்களுக்கான போட்டிகள் இன்று காலை 8.30 மணிமுதல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெறவுள்ளன. இப்போட்டிகள் இன்றிலிருந்து மூன்று நாள்கள் தொடர்ந்து இடம் பெறவுள்ளன. (ம-86)

## உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,ஏப்.14

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவிலும், வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடனும் அளவெட்டி டயானா விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொளளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

☆ வடமராட்சி யங்கம்பன்ஸ் வி.க. எதிர் யாழ்ப்பாணம் சென். றோக்ஸ் வி.க.

☆ அளவெட்டி விநாயகர் வி.க. எதிர் பருத்தித்துறை சிவானந்தா வி.கழகம்.

(ம-86)

## கரபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.14

யாழ்மாவட்ட கரபந்தாட்டச்சங்கம் மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று முதல் ஆரம்பமாகின்றன.

யாழ். மாவட்டத்தில் உள்ள 20 முன்னணிக்கழகங்கள் பங்குபற்றும் இச்சுற்றுப் போட்டி நான்கு பிரிவுகளாக லீக்முறையில் நடத்தப்படும்.

இன்றைய ஆட்டங்கள் இடம் பெறும் மைதானங்கள் மற்றும் பங்குபற்றும் கழகங்கள் பற்றிய விவரம் வருமாறு:-

ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலய மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்கள்:-

☆ பிற்பகல் 4மணி - ஆவரங்கால் மத்திய வி.க. எதிர் நீர்வேலி ஐக்கிய வி.க.

☆ மாலை 5மணி - இமையாணன் மத்திய வி.க. எதிர் அச்சுவேலி தோப்பு விளையாட்டுக்கழகம்.

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம்.

☆ மாலை 4.30 மணி - ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக கழகம் எதிர் நீர்வேலி காமாட்சி வி.க.

☆ மாலை 5மணி - புத்தூர் கலைமதி வி.க எதிர் மட்டுவில் மோகன தாஸ் வி.க.

- யாழ்.மாவட்ட கர்ப்பந்தாட்டச் சங்க மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் -

☆ பிற்பகல் 4 மணி - காங்கேசன்துறை ஐக்கிய வி.க எதிர் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகு அணி.

☆ பிற்பகல் 4 மணி - யாழ். பல்கலைக்கழக அணி எதிர் மட்டுவில் வளர்மதி வி.க.

☆ மாலை 5 மணி - முடமாவடி ஞானவைரவர் வி.க. எதிர் அரியாலை ஐக்கிய வி.க.

☆ மாலை 5 மணி - பண்ணாலை கணேசன் வி.க. எதிர் பாஷையூர் சென்.அன்ரனீஸ் வி.க.

☆ மாலை 4.30 மணி - நாயன்மார்கட்டு பாரதி வி.க. எதிர் பாஷையூர் சென்.அன்ரனீஸ் வி.க. (பெண்கள்)

(ம-5)

உதயன்

## தர்மமே வெல்லும்!

"தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும். தர்மம் ஒருநாள் வெல்லும்" - இந்த ஆன்றோர் நெறி தென் தமிழீழத்தில் ஒருதடவை நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஈழத் தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்திற்கே பெரும் புள்ளியாய் வந்த கருணாவின் ஆட்டம் 40 நாள்களில் ஒடுக்கப்பட்டிருக்கிறது. தன்னைக் கவ்விய சூதை இந்த 40 நாள்களில் வென்றிருக்கிறது தர்மம்; வரலாற்றுத் துரோகத்துக்கு எதிரான தர்ம யுத்தம் பெரிய எதிர்ப்பேதுமின்றி சிலநாள்களிலேயே வெற்றிகரமாக நிறைவேறியிருக்கிறது.

இந்த 40 நாள்களும் கருணா போட்ட வாய்ப்பந்தலை - வாய்வீச்சுப் பிரபலாபத்தைக் கேட்டவர்கள், இப்போது கருணாவும் அவரது கும்பலும் புறமுதுகிட்டு ஓடித் தப்பியதைப் பார்த்து வாயடைத்துப்போயிருக்கின்றார்கள்.

தென்தமிழீழத்தில் ஏற்பட்ட குழப்பம் குறித்து ஆரம்பம் முதலே புலிகளின் தலைமை குழப்பமோ, பதற்றமோ காட்டாமல் தெளிவான - நிதானமான - உறுதியான - போக்கை வெளிப்படுத்தியது. வெறும் வாய்ச்சவடால் விடாமல், "இது கருணா என்ற தனி மனிதனின் பிரச்சினை. அதற்குரிய வகையில் அது அணுகப்படும" - என்ற திட்டவட்டமான தகவலை வெளிப்படுத்தியதோடு அமைதி பேணியது.

ஆனால், தென்னிலங்கை ஊடகங்களும், இந்திய செய்தி நிறுவனங்களும், இந்திய சார்புடைய பிற செய்தி அமைப்புக்களும்தான் ஒன்றுமில்லாத கருணாவை ஊதிப்பெருப்பித்து பெரும் இராணுவ வித்தகராகவும், வலிமைமிக்க சக்தியாகவும் வெளிப்படுத்தி நின்றன. கருணாவும் தன்பாட்டுக்கு இந்த ஊடகங்களைப் பயன்படுத்தி தன்மானத் தலைவன் பிரபாகரனுக்கு நிகராக - ஏன், சில சமயங்களில் அவரைவிடப் பெரிய தலைவராக - வெளியுலகிற்கு அம்பலப்படுத்த முயன்றார்.

ஈழத் தமிழர்கள் நடத்திய பல வரலாற்றுச் சமர்கள் தன்னொருவனால் மட்டுமே சாத்தியமாயிற்று என்றும் இல்லையேல் அவை தோல்வியில் முடிந்திருக்கும் என்றும், ஏன் தலைவர் பிரபாகரன்கூட தன்னால்தான் காப்பாற்றப்பட்டு உயிர் வாழ்கிறார் என்றும்கூட நீட்டி முழங்கினார் கருணா.

வன்னியில் உள்ள புலிகளின் தலைமை, இந்த யுத்தநிறுத்த காலத்தில் அரசபடையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைத் தாண்டித் தனது எல்லைக்குள் வந்து எதுவும் செய்துவிடாது என்ற நம்பிக்கையில்தான் இப்படி எல்லாம் முழங்கினார் கருணா; இப்படி எல்லாம் வரலாற்றுத் துரோகம் புரிந்தார் அவர்.

ஆனால், நிஜத்தில் நிலைமையோ வேறாகவிருந்தது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைத் தாண்டி வந்து புலிகளின் படைகள் மட்டு., அம்பாறை மாவட்டங்களுக்குள் திடீரென வந்து விஸ்வரூபம் எடுத்து நின்றபோது கருணா கும்பல் நிலை குலைந்து போனது. தனது தாயகம் என்று பிரதேசவாதம் பேசிய இடத்தை விட்டே அது ஓட்டம் பிடித்தது.

அப்போதுதான் 'வெறும் மண் குதிரை'யைப் பார்த்து ஆஹா, ஓஹோ என்று புளுகித்தள்ளிய தென்னிலங்கை மற்றும் இந்தியசார்பு ஊடகங்களுக்கு உண்மை புரிந்தது.

மாவீரனாகத் தாம் போற்றிப் புகழ்ந்த கருணா, நின்று யுத்தம் புரியக்கூடத் திராணியோ, தைரியமோ இல்லாமல் ஓட்டம் பிடித்தது கண்டு அவை வாய் பிளந்து நிற்கின்றன.

ஒரு வீரன் எந்த நெருக்கடி வந்தாலும் தனது ஆயுதத்தைக் கைவிடமாட்டான். அல்லது ஆயுதத்தைக் கேவலப்படுத்தவோ அல்லது அழிக்கவோ முற்படமாட்டான். ஆனால், கருணா தன்னிடமிருநத ஆயுதங்களில் கணிசமான ஒரு தொகுதியைத் தீவைத்து எரித்து அழித்துவிட்டுச் சென்றார் என வெளியான செய்திகள் கருணாவின் கேடுகெட்ட தரத்தை வெளிப்படுத்தப் போதுமானது.

இந்த யுத்தநிறுத்த காலத்திலும் பெரும் இரத்தக்களறி ஏதும் இல்லாமல் கருணாவின் கொடூரப் போக்கிலிருந்து மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டப் பிரதேசங்களை விடுவிக்கும் தனது படைநகர்வை கனகச்சிதமாகச் செய்ததன்மூலம் தனது இராணுவ வல்லமையைப் புலிகளின் தலைமை மீண்டும் ஒரு தடவை நிரூபித்திருக்கின்றது.

உண்மையை உலகுக்கு எடுத்தியம்ப முயன்ற கொழும்புப் பத்திரிகை நிறுவனங்களை கருணா கும்பல் தனது அடாவடித்தனங்களினால் நெருக்குதலுக்குள்ளாக்கி, அந்தப் பத்திரிகைகளைத் தென்தமிழீழத்துக்கு வரவிடாது தடுத்தது. என்றாலும் அப்பத்திரிகைகள் தங்கள் நிலைப்பாட்டில் இருந்து சற்றும் வில்லாமல் உண்மையை உலகிற்கு உரைக்கும் - உணர்த்தும் - தமது பணியை விடாது புரிந்தன. அவற்றின் நிலைப்பாடு சரி என்பதும் இப்போது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

# தேர்தலில் போட்டியிட்ட 191 குழுக்களின் பிணைப்பணம் அரசுடைமையாக்கப்பட்டுள்ளது

கொழும்பு,ஏப்.14

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 192சுயேச்சைக்குழுக்கள் போட்டியிட்டுள்ளன. இவற்றில் ஒன்றைத் தவிர ஏனைய 191 குழுக்கள் மூலம் பிணைப்பணமாக வைப்பிலிடப்பட்டிருந்த தொகை அரசுடைமையாக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் பெரும் தொகையான சுயேச்சைக் குழுக்கள் பொதுத் தேர்தலில் போட்டியிட்டமை இதுவே முதல் தடவையாகும்.

யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்ட சுயேச்சைக்குழு - 1 - 5 ஆயிரத்து 156வாக்குகளைப் பெற்றுள்ளது. அது நூற்றுக்கு 0.06 சதவீதமாகும். கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட சுயேச்சைக்குழு 7 - 683 வாக்குகளையும், பதுளை மாவட்டத்தில் போட்டியிட்ட சுயேச்சைக்குழு - 7 - 329 வாக்குகளையும் பெற்றுள்ளன. 165 சுயேச்சைக் குழுக்கள் 100 இற்கும் குறைவான வாக்குகளையே பெற்றுள்ளன. இவற்றுள் 21குழுக்கள் 10இற்கும் குறைவான வாக்குகளைப் பெற்றுள்ளன.

திகாமடுல்ல, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் போட்டியிட்ட சில குழுக்கள் தலா 3முதல் 4வாக்குகள் வரை பெற்றுள்ளன.

1981ஆம் ஆண்டு முதலாம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல் விதிகளுக்கமைய எந்தவொரு சுயேச்சைக் குழுவும் தேர்தல மாவட்டமொன்றில் பெறப்படும் மொத்த வாக்குகளின் எண்ணிக்கையில் 0.12 வீதத்திற்குக் குறைவான வாக்குகளைப் பெறுமாயின் அக்குழு சார்பில் போட்டியிட்ட அபேட்சகர்களால் வைப்பிலிடப்பட்டுள்ள பிணைப்பணம் அரசுடைமையாக்கப்படும். ஒவ்வோர் அபேட்சகரும் தலா 2ஆயிரம் ரூபாவைத் தெரிவத்தாட்சி அதிகாரியிடம் பிணைப்பணமாக வைப்பிலிட வேண்டும்.

அந்தவகையில், இம்முறை 30லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை பிணைப் பணமாகச் செலுத்தப்பட்டுள்ளதாகத் தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஒரு சுயேச்சைக் குழுவினால் சமர்ப்பிக்கப்படும் வேட்புமனு நிராகரிக்கப்பட்டால் மாத்திரமே அந்த வைப்புப் பணம் மீளளிக்கப்படும் - என்று கூறப்பட்டது. (எ-8)

## சமாதான முயற்சிகளுக்கு உதவ சுவிஸ் அரசு விருப்பம்

கொழும்பு,ஏப்14

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு உதவுவதில் தமது நாடு அக்கறையாக உள்ளது என்று சுவிஸ் அரசு அறிவித்துள்ளது.

இலங்கைக்கு வருகைதந்த சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர் குழு இதனைத் தெரிவித்துள்ளது,

இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்திலிருந்து விலகிச்செல்லும் ஒரு நாட்டில் மனித உரிமைகளிலும் அரசியல் சீர்திருத்தங்களிலும் முன்னேற்றம் ஏற்படுவது அவசியமானது என்று அந்தக் குழு தெரிவித்தது.

பல்வேறு சமூகங்கள் ஒற்றுமையாகவும் சமாதானமாகவும் எவ்வாறு வாழுகின்றன என்பதைக் காண்பிப்பதன்மூலம் நோர்வேயின் முயற்சிகளுக்குச் சுவிற்ஸர்லாந்தும் உதவமுடியும் என்றும் அக்குழுவைச் சேர்ந்த டிக்மார்டி கூறியுள்ளார். (ஓ-3)

## பஸ்கள் திருடப்பட்டமை தொடர்பாக யாழ்.வாசிகள் இருவர் கொழும்பில் கைது

கொழும்பு,ஏப்.14

இரவுவேளையில் வீதியோரத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 45லட்சம் ரூபா பெறுமதியான இரு பஸ்களைத் திருடியது தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுள்ள யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் இரு நபர்களை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மொறட்டுவ மஜிஸ்திரேற் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் இருபஸ் வண்டிகள் காணாமற்போயுள்ளதாக இரு வர்த்தகர்கள் மொறட்டுவப் பொலீஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இது தொடர்பாக, விசாரணை மேற்கொண்ட மொறட்டுவ பொலீஸார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படும் வல்லிபுரம் அபயராஜா, சண்முகநாதன் முரளிதரன் ஆகிய இருவரையும் கைதுசெய்திருந்தனர்.

கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் களவாடப்படும் வாகனங்கள் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு விற்பனைக்காகக் கொண்டுசெல்லப்படுவதாகக் கிடைத்துள்ள தகவல்களை அடுத்தே பொலீஸார் இந்த இருவரையும் தீவிர விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-8)

## புதிதாக வீடுகளுக்கு மின்வழங்க கிராம அலுவலரின் கடிதம் தேவை

### மின்சார சபையின் பிரதி முகாமையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.14

வலி தென்மேற்குப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் புதிய கட்டடங்கள், வீடுகள் மற்றும் கடைகளுக்கு மின் வழங்குவதாயின் கிராம அலுவலரின் சிபார்சுக் கடிதம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் மட்டுமே மின் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை மின்சார சபையின் வடக்குப் பிரதி பொது முகாமையாளர்(பதில்) வி.சண்முகநாதன்.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்தக் கடிதத்தில் -

புதிய கட்டடங்கள், கடைகளுக்குப் புதிதாக மின்வழங்கும் விவகாரத்தில் கட்டட அமைவிடம், அதில் குடியிருப்பவர்களின் விவரம் அத்துடன் கிராம அலுவலரின் அத்தாட்சிக் கடிதம் என்பன இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில்தான் எதிர்காலத்தில் மின் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதில் உள்ளது.

(எ-185)

**நாளை**

சித்திரை 03
வியாழக்கிழமை
(15.04.2004)
திதி : ஏகாதசி
இரவு 7.23 வரை.
நட்சத்திரம்: அவிட்டம்
காலை 6.12 வரை
சுபநேரம்: 7.34-9.04
ராகுகாலம்:1.34-3.04
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

ஏட்டில் உள்ளது வேறு.
நாட்டில் நடப்பது வேறு.

## வீதிப் போக்குவரத்துக்கு வழிகாட்டும் அடையாளப் பலகை மீதும் விளம்பரங்கள்

வலி.வடக்கு,ஏப்.14

வீதிப் போக்குவரத்துக்கு வசதியாக நிறுவப்பட்டுள்ள அடையாள கம்பங்களின் மேல் விளம்பரங்களை ஒட்டுவதனால் வாகன சாரதிகள் பல்வேறு இடையூறுகளுக்கும் உள்ளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக, பாடசாலைகளின் முன்பாக உள்ள "பாடசாலை மாணவர்கள் வீதியைக் கடக்கின்றார்கள்" என்ற அடையாளப் பலகைகளின் மீது தனியார் மரண அறிவித்தல்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலித் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

யாழ். இந்து மகளிர் கல்லூரி மற்றும் ஆரம்பப் பாடசாலை ஆகியவற்றின் முன்னால உள்ள வீதியில் நடப்பட்ட அடையாளப் பலகைகள் மீதும் இத்தகைய விளம்பரங்கள் பரவலாகக் காணப்படுகின்றன.

இதனால், மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர் என்றும் -

சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் - கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன. (எ-86)

## நாடாளுமன்றத்தில் பிக்குகளுக்கு விசேட உணவகமும், ஓய்வறையும்!

### புதிதாக நிறுவுவதற்கு நடவடிக்கை

கொழும்பு,ஏப்.14

புதிய நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள ஹெல உறுமய கட்சியின் பௌத்த பிக்குகளின் பயன்பாட்டுக்கென நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் விசேட உணவகமும், ஓய்வு அறையொன்றும் நிறுவப்படவுள்ளது.

ஏறகனவே, பத்திரிகையாளர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள உணவுச்சாலையின் ஒரு பகுதி பௌத்த பிக்குகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் -

அதற்கு அருகில் உள்ள அறை அவர்களது ஓய்வு அறையாக ஒழுங்குசெய்யப்படவுள்ளது என்று நாடாளுமன்றப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த முறை காலி மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவான பத்தேகம சமித்த தேரருக்கு இத்தகைய விசேட ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படவில்லையெனத் தெரிவித்த அவர், பௌத்த பிக்குகள் சமய முறைப்படி உணவு அருந்துவதற்கு ஏற்றவகையில் ஒரு லட்சம் ரூபா செலவில் ஆசனங்களும் அமைக்கப்பட்டு வருதாகவும் தெரிவித்தார்.(எ-8-ரி)

## தாரண வருஷ விஷேச நாள்கள்

தாரண ஆண்டின் சித்திரை மாதத்தில் வரும் ஆரம்பத்தில், புதுக் கணக்குப் பதிதல், பெரியோர் மற்றும் குருதரிசனம், ஏர் மங்கலம் ஆகியவற்றுக்கான விஷேச நாள்களும் வாசகர்களின் நலன் கருதி இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

**திருக்கணித பஞ்சாங்கத்தின் பிரகாரம்**

**வியாபாரம் ஆரம்பித்தல், புதுக்கணக்குப் பதிதல்:**

சித்திரை 14ஆம் நாள் (26.04.2004) திங்கட்கிழமை பிற்பகல் 12.05 மணிமுதல் 1.17 வரை. சித்திரை 28 ஆம் நாள் (10.05.2004) திங்கட்கிழமை முற்பகல் 11.36 மணிமுதல் 12.48 வரை.

**பெரியோர், குருதரிசனம்**

சித்திரை 5ஆம் நாள் (17.04.2004) சனிக்கிழமை பிற்பகல் 12.33 மணிமுதல் 1.21 வரை

சித்திரை 7 ஆம் நாள் (19.04.2004) திங்கட்கிழமை இரவு 8.07 மணிமுதல் 8.55 மணிவரை.

**ஏர்மங்கலம் வயற்தோட்டச் செய்கை**

சித்திரை 14ஆம் நாள் (26.04.2004) திங்கட்கிழமை பிற்பகல் 12.05 மணிமுதல் 1.17 வரை.

சித்திரை 22ஆம் நாள் (04.05.2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.38 மணிமுதல் 12.26 வரை.

சித்திரை 24ஆம் திகதி (06.05.2004) வியாழக்கிழமை முற்பகல் 11.13 மணிமுதல் 12.49வரை.

சித்திரை 28ஆம் நாள் (10.05.2004) திங்கட்கிழமை முற்பகல் 11.36 மணிமுதல் 12.48 வரை.

**வாக்கிய பஞ்சாங்கத்தின் பிரகாரம்**

**வியாபாரம் ஆரம்பித்தல் புதுக்கணக்குப் பதிதல்**

சித்திரை 14ஆம் நாள் (26.04.2004) திங்கட்கிழமை பகல் 11.35 மணி முதல் 1.47 மணிவரை.

சித்திரை 28ஆம் நாள்(10.05.2004) திங்கட்கிழமை பகல் 11.06 மணி முதல் 12.18 மணி வரை.

**பெரியோர், குருதரிசனம்**

சித்திரை 5ஆம் நாள் (17.04.2004) சனிக்கிழமை பகல் 12.03 மணி முதல் 12.51 மணிவரை. இரவு 7.37 மணிமுதல் 8.25 மணி வரை.

சித்திரை 20ஆம் நாள் (02.05.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 7.43 மணிமுதல் 8.39 மணிவரை.

**ஏர்மங்கலம் வயற்தோட்டச் செய்கை**

சித்திரை 14ஆம் நாள் (26.04.2004) திங்கட்கிழமை பகல் 11.48 முதல் 1.18 மணி வரை.

சித்திரை 24ஆம் நாள் (06.05.2004) வியாழக்கிழமை பகல் 11.13 மணிமுதல் 12.38 மணிவரை.



## தென் இந்திய
# நடனக் கலைஞர்களின்



## நடன சங்கமமும், நடனப் பயிற்சியும்

**(2004 மே 4 முதல் 10 வரை)**

பரதநாட்டியம், குச்சுப்புடி, கதகளி ஆகிய சென்னையைத் தளமாகக் கொண்ட உலகப் புகழ்பெற்ற தென் இந்திய சாஸ்திரிய நடனங்களை ஏழு நாள்களுக்கு யாழ். மண்ணில் நடத்தவுள்ளோம்.

(04.05.2004 - 10.05.2004) வரை.

மேற்படி நிகழ்ச்சியானது, நடனப் பாரம்பரியத்தில் உருவாகிய ஆசிரியர்கள், ஆசான்களினால் நடத்தப்படும். நடனத்தை முறையாகப் பயின்றவர்களாகவும் அநுதந்த நடன வடிவங்கள் சார்ந்த *கலாஷேத்திரா, வழுவூர், பந்தணை நல்லூர், கலாமண்டலம், வேம்பட்டி குச்சுப்புடி பயிற்சி நிலையம்* முதலிய பள்ளிகளூடாகக் கற்றுத்தேர்ந்த விற்பன்னர்களாகவும், சிறந்த ஆற்றுகையாளர்களாகவும் உள்ள உலகப் புகழ்பெற்ற,

**அலமேலுவும்**
**உஷா வசந்தகுமார்**
**உன்னிகிருஸ்ணன்** - பரத நாட்டியமும்
**ராஜேஸ், லக்ஸ்மி பிரியா** - குச்சுப்புடி
**ஸ்ரீபால சுப்பிரமணியம்** - கதகளி

ஆகியோருடன் அவர்களது நடனக்குழுவினரும் இணைந்து இந்த நடன நிகழ்ச்சியையும் நடனப் பயிற்சியையும் வழங்கவுள்ளார்கள்.

இந்த ஏழுநாள் நடனப் பயிற்சியில் (பரதநாட்டியம், குச்சுப்புடி, கதகளி)

சேரவிரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 20.04.2004 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பதிவுசெய்யவும்.

பதிவுசெய்யவேண்டிய முகவரி:

**ரி.கே.ரூறிஸ்ற் இன்**

பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி), யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம் - 077 6143541, 021 222 5680

(C34431)(34-14-13-24)

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட, இணைந்த குளியல் அறை, வாகனத் தரிப்பிட வசதி, தொலைபேசி வசதிகளுடன் கூடிய அமைதியான சூழலில் உள்ள வீடு வாடகைக்கு வழங்கப்படவுள்ளது.

குறிப்பு: *அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு மட்டும்.*

தொடர்புகளுக்கு:
**0777 306473**

(30714) (24-14-13)

## நீர்வேலி கந்தசுவாமி கோயில்
### மஹோற்சவம் - 2004
விசேட உற்சவ கால நிகழ்வுகள்

| | |
|---|---|
| 16.04.2004 | வெள்ளி காலை 10 மணி கொடியேற்றம் |
| 21.04.2004 | புதன் கார்த்திகை உற்சவம் |
| 25.04.2004 | ஞாயிறு மஞ்சம் |
| 30.04.2004 | வெள்ளி பிற்பகல் 4 மணி மாம்பழத்திருவிழா. கைலாய வாகனம், |
| 01.05.2004 | சனி பிற்பகல் 5 மணி வேட்டைத்திருவிழா |
| 02.05.2004 | ஞாயிறு சப்பரத் திருவிழா |
| 03.05.2004 | திங்கள் இரதோற்சவம். 6.30 மணி வசந்த மண்டபப் பூஜை, 9.30 மணி ரதம் வீதியுலா. பி.ப. 4.00 மணி இரதாவரோகணம் |
| 04.05.2004 | செவ்வாய் காலை 10 மணி தீர்த்த உற்சவம் |
| 05.05.2004 | புதன் மாலை திருக்கல்யாணம் |

முருகன் அடியார்கள் அனைவரும் மேற்படி மஹோற்சவ காலங்களில் பெருமானைத் தரிசித்து அவனருளாலே அவன்தாள் வணங்கி அருள் பெறுவீராக!

*நீர்வேலி.* (சி-34453) (24-13-14)
பரிபாலன சபை,
நீர்வேலி கந்தசுவாமி கோயில்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வட்டுக்கோட்டை, அராலி மேற்கு நொச்சியம்பதி விநாயகர் ஆலய மஹோற்சவ குருவாகிய

**சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் J.P.**

(புன்னாலைக்கட்டுவன்)

அவர்களுக்கு ஜப்பான் உள்ளக பல்கலைக்கழக 'நுண்ணறிவு, கலைப்பிரிவால் - தகுதிகாண் நுண்ணறிவிற்கான கலாநிதி (Doctor) பட்டம் (THE TITLE OF DOCTOR OF THIS ORDER INTERNATIONAL RECOGNITION) வழங்கப்பெற்றமையிட்டு நொச்சியம்பதி விநாயகர் அடியார்கள் சார்பாக அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நொச்சியம்பதி விநாயகர் தேவஸ்தான நிர்வாகசபை.

| | | |
|---|---|---|
| **க.செல்லக்கண்டு** | **சு.விக்னேஸ்வரன்** | **அ.கோபாலகிருஷ்ணன்** |
| தலைவர். | செயலாளர். | பொருளாளர். |

(C34444) (24-13-14)

சித்திரைப் புத்தாண்டில் யாழ். மக்களுக்கு அறிமுகம் செய்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

EAGLE TATA INTERNATIONAL LTD

# ஈகிள் துவிச்சக்கரவண்டி EAGLE BICYCLE

இந்தியாவின் TATA பொறியியல் நிறுவனத்தின் பாரம்பரிய உயர் தொழில்நுட்பத்திறனால் உருவாக்கப்பட்டது.

# ஈகிள் துவிச்சக்கரவண்டி EAGLE BICYCLE

இலகுவான, சொகுசான பயணத்திற்கு, உறுதியான நீண்டகாலப் பாவனைக்கு - உகந்த வகையில் வடிவமைக்கப்பட்டது.

# ஈகிள் துவிச்சக்கரவண்டி EAGLE BICYCLE

TATA INTERNATIONAL LIMITED நிறுவனத்தினால் சர்வதேச தரத்திற்கமைய சகல தரப்பினருக்கும் ஏற்றவகையில் தயாரிக்கப்பட்டவை.

# ஈகிள் துவிச்சக்கரவண்டி EAGLE BICYCLE

**EAGLE GENTS**
**EAGLE LADIES**
**EAGLE SPORTS**
**EAGLE UNION**

இலங்கையின் ஏக விநியோகஸ்தர்கள்:
**KING MARKETING**
(30809) (24-13-14)

யாழ் நகரில்
**INTERNATIONAL HARDWARES**
285, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

# இலங்கை இனவிவகாரத்தில் இந்தியா தனது கொள்கையை மாற்றவேண்டும்

## இல்லையேல் தமிழர்களை அழிக்கச் செயற்படுவதாகவே அர்த்தப்படும்

யாழ்ப்பாணம்,ஏப்.14

இந்தியாவை ஈழத்தமிழர்கள் என்றும் நட்பு சக்தியாகவே பார்க்கின்றார்கள் அந்த வகையில் இந்தியா தமிழர்களின் இனப்பிரச்சினைத் தீர்வில் ஒத்துழைப்புடன் செயற்படவேண்டும்.

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் உதயனுக்குத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் இலங்கை விடயத்தில் இந்தியாவுக்கு ஏற்பட்ட மனக்கசப்புக்கள் எல்லாவற்றையும் மறந்து தமிழ்மக்களின் பிரச்சினைக்கான தீர்வு குறித்துப் புதிய நோக்கோடு இந்தியா செயற்படவேண்டும்.

தென்னாசியாவில் பலமிக்க சக்தி இந்தியா என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழர்களின் தீர்வு விடயத்தில் இந்தியா முழுமனதுடன் செயற்படுவதற்கு ஏதுவாக தனது இப்போதைய வெளியுறவுக் கொள்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே ஈழத்தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் நன்மை கிடைக்கும். இல்லையேல் தமிழர்களை அழிக்க இந்தியா நேரடியாகவும் மறைமுகமாகவும் செயற்படப்போகிறது. என்றே அர்த்தப்படும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் 'உதயனுககு' வழங்கிய செவ்வியின் முழு விவரம் வருமாறு:-

### வெளிநாடுகளின் அக்கறை

*கேள்வி:-* இலங்கைத் தமிழர் விவகாரத்தில் வெளிநாடுகளின் அக்கறைகள், தலையீடுகள் அதிகரித்து வருகின்றன. இது பற்றி என்ன கருதுகிறீர்கள்?

*பதில்:-* ஈழத்தமிழர் பிரச்சினையில் உலக நாடுகள் அக்கறை காட்டுவது வரவேற்கத்தக்கது. எமது பிரச்சினையை இந்த நாட்டிற்குள்ளேயே தீர்க்கமுடியாததினால் சர்வதேச சமூகம் எமது பிரச்சினையில் ஈடுபாடு காட்டின. உண்மையில் எமது பிரச்சினையை உலக அரங்கில் ஓங்கி ஒலிக்கச் செய்து உலகின் கருத்துக்களை எம் பால் ஈர்க்கச் செய்வதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் அடிப்படை நோக்கம்.

ஒக்ரோபர் 22ஆம் திகதியன்று தலைவர் வே.பிரபாகரனை நான் சந்தித்தபோது எமது உரையாடலில் தலைதூக்கிய ஒரு கருத்து உலகின் கருத்தினை எவ்வாறு நாம் ஈர்ப்பது என்பதுதான். எமக்கு அடி விழும்போது நாம் அழுகிறோம். எமது அழுகுரல் அயலவர்களுக்கு கேட்டால்தான் அவர்களும் எமக்கு உதவ முன்வருவார்கள்.

போர்க்களத்தில் உலகம் வியகத்தக்க பல வெற்றிகளை நாம் ஈட்டியுள்ளோம். அவற்றின் மூலம் சர்வதேசத்தின் கவனத்தை எமது பக்கம் ஈர்த்துள்ளோம். அரசியல் இராஜதந்திர நடவடிக்கைகள் போர்க்கால நடவடிக்கைகளுக்கு ஈடுகொடுக்கக் கூடியவகையில் அமையவேண்டும்.

முழுமையான சுதந்திரமுடைய இறைமைகொண்ட ஈழத்தை நாம் நாடிநின்றோம். இதனை உலகம் ஏற்க மறுத்து பயங்கரவாதிகள் என்று எமக்குப் பெயர் சூட்டியது. நாம் அதிலிருந்து மேலும் இறங்கி வந்து இணைப்பாட்சியில் இனிய வாழ்வு காண்போம் என்று கூறினோம். அப்போதும் எமக்குப் பயங்கரவாதப் பட்டம் தொடர்ந்தும் சூட்டப்பட்டது. மேலும் நாம் இறங்கி வந்து இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான திட்டவரைவை முன்வைத்தோம். அதனைச் சிங்கள வாதப் பேரினவாதம் தட்டிக்கழித்தது.

ஈழத்தமிழர் பிரச்சினைகளை தட்டிக்கழிக்காது ஆளும்கட்சிக்கு ஆமாப் போடாது, சிங்களப் பேரினவாதத்திற்கு அடிபணிந்து போகாது, அழிவுக்கு ஆளாகின்ற எம் தமிழினத்திற்குக் குரல் கொடுக்கவேண்டியது சர்வதேச நாடுகளின் முக்கிய பொறுப்பாகும்.

## புதிய நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் சொல்கிறார்

தமது நாட்டின் நலனை மட்டும் கவனத்திற்கொண்டு எமது நலன்களைப் புறக்கணிப்பதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கிறோம். தமது நலனைக் கருத்திறகொண்டு ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முனைவது எமக்கு மட்டும் அழிவைத் தராது. இதில் ஈடுபடுகின்ற நாடுகளுக்கும் பெரும் சிக்கலைத் தோற்றுவிக்கும் இது தவிர்க்கமுடியாததாகும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் வெளிநாடுகள் பல தலையிடுவது எமக்குத் தெரியும். குறிப்பாக இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகியவற்றின் தலையீடுகளே அதிகமாகவுள்ளன. இந்தியாவில் இந்திராகாந்தி ஆட்சியல் இருந்தபோது அவருடைய அணுகுமுறை எமக்குச் சார்பாகவே அமைந்திருந்தது. ஆனால், அவருடைய மகனான ராஜீவ்காந்தியின் அரசியல் முதிர்ச்சியின்மையால் விரும்பத்தகாத செயல்கள் இடம்பெற்றன.

இலங்கையின் ஒருமைப்பாட்டில் இந்தியாவிற்கு கூடுதலான அக்கறை உண்டு என்று அண்மைக்காலமாக கூறப்பட்டுவருகிறது. அங்குதான் எமகது ஆபத்துக் காத்துள்ளது.

இலங்கையில் தமிழன் தலைநிமிர்ந்துவிட்டால் தமிழ்நாட்டில் விழிப்புணர்வு ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் காரணமாக இந்தியா ஈழத் தமிழர்களுக்குப பாதகமாகச் செயற்படுகிறது. பொருள்பொதிந்த இணைப்பாடசியை இந்தியா விரும்பவில்லை.

இந்தியா எமது அயல்நாடு. அதனைப் பகைத்துக்கொள்ளும் அளவிற்கு தமிழர்கள் அரசியல் முதிர்சசி அற்றவர்கள் அல்லர். இந்தியாவை ஈழத்தமிழர்கள் என்றும் நட்புச் சக்தியாகவே பார்க்கின்றார்கள். அந்த வகையில் இந்தியா தமிழர்களின் இனப்பிரச்சினைத தீர்வில் ஒத்தாசை நிலைநின்று செயற்படவேண்டும்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்புணர்வுகளை மறந்து, இந்தியா எமக்கு நேசக்கரம் நீட்டவேண்டும். தனது வெளியுறவுக் கொள்கை குறித்து மீளச் சிந்தித்துச் செயற்படவேண்டும். இத்தனை மறுசீரமைக்காமல், தனது சிந்தனை அறிவை மறந்து, சிங்களவர்களுடன இணைந்து செயற்படுவார்களேயானால் அவர்களுடைய தலைவிதியை எண்ணி நாம் கவலைப்படுகிறோம்..

தற்போது இந்தியாவில் இடம்பெறும் செயற்பாடுகள் ஈழத்தமிழர்களுக்குச் சாதகமாகவே உள்ளன. தமிழ்நாடு எமக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை.

தற்போது நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளோம். இதன் மூலம் தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான், தலைவன் பிரபாகரன்தான் என்பதையும் சர்வதேசத்திற்கு எமது மக்கள் பறைசாற்றியுள்ளனர்.

*கேள்வி:-* தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியா தொடர்பாக எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது?

*பதில்:-* தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேவையற்ற வகையில் எவரையும் பகைப்பதில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளது. ஆனால், இந்தியா தொடர்ந்தும் ஈழத்தமிழர்களின் நல்வாழ்வுக்கும் அரசியலுக்கும் ஊறு விளைவிக்கக்கூடிய வகையில் செயற்படுமாயின் எமது இனத்தின் எதிர்காலச் செயற்பாடுகளைக் கருதி தமிழரின் நலனுக்காக நாம் எதனையும் செய்வோம்.

இந்தியாவுடன் மோதும் நிலைக்கு நாம் மீண்டும் ஒருமுறை தள்ளப்பட்டாலும் அதனை தவிர்க்கமுடியாத கசப்பான நிகழ்வாக நாம் எடுத்துக் கொள்வோம்.

*கேள்வி:-* இலங்கை மூன்று தேசிய வாதங்களைக் கொண்ட நாடாக மாறி வருவதாக கருதவேண்டியுள்ளது. தெற்கில் சு.க. ஜே.வி.பி. கூட்டமைப்பின் வெற்றியைச் சிங்கள தேசியவாதத்தின் எழுச்சியாகக் கருதலாமா?

*பதில்-* நிச்சயமாக அவ்வாறு கருத முடியாது. பேரினவாத வெறியாட்டத்திற்கு வடிவம், விளக்கம் கொடுக்கும் நிலையாகவே அதனைக் கொள்ளமுடியும். உண்மையில் சிங்கள மக்கள் இதனை ஏற்பார்கள் என்று கூறமுடியாது. தேர்தலில் அவர்கள் பெற்ற வெற்றியால் சிங்கள பேரினவாதம் மீண்டும் தலைதூக்குமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

சிங்கள தேசத்தைப் பொறுத்த வரையில் எவர் ஆட்சிக்கு வந்தாலும் ஈழத்தமிழர் பிரச்சினை பற்றி எத்தகைய மாற்றமும் ஏற்படப்போவதில்லை.

*கேள்வி:-* தமிழீழ விடுதலை அணியின் செயற்பாடுகளுக்கு புத்துயிர் அளிக்க முயற்சிப்பீர்களா? கொள்கைகளை ஏற்று அரசியல் பணிபுரிவீர்களா?

*பதில்-* தமிழீழ விடுதலை அணிக்கு புத்துயிர் அளிக்கும் எண்ணம் எனக்குத் துளி கூட இல்லை. அந்த நப்பாசையில் நாடாளுமன்ற வேட்பாளராக நிற்கவும் இல்லை. நாம் தற்போது முன்வைத்துள்ள கோரிக்கைகளை முன்வைத்து விடுதலைப் புலிகளுக்கு பலம் சேர்ப்பதே எனது நோக்கம்.

தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்டபோது அதன் ஆரம்பகால உறுப்பினராக இருந்து அரசியல் பணி புரிந்துள்ளேன். அன்றைய காலத் தலைவர்கள் தூய சிந்தனைத் தெளிவுடையவர்களாக இருந்தார்கள். அதனால், தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழரசுக் கட்சியையும், தமிழ்க் காங்கிரஸ் கட்சியையும் ஒன்றிணைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார்கள். அப்போதும் நான் அதிலிருந்து பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்தேன்.



இங்கு தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்டதனால் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதே தவிர எண்ணத்தில் மாற்றம் ஏற்படவில்லை. அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியல் இருந்த சில அரசியல் தலைவர்கள் இனறைய தலைவர் போல நாற்காலிகளுக்கு ஆசைப்பட்டார்கள். அதனால் தமிழர் விடுதலைக் கூட்டணி தடம்புரண்டது. அதன் காரணத்தினால் அக்கட்சியில் இருந்து சென்ற சிலருடன் சேர்ந்து தமிழீழ விடுதலை அணியை நான் உருவாக்கினேன். அன்றிலிருந்து இன்றுவரை நாம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகவே செயற்பட்டு வருகிறோம்.

தற்போது கூட்டணிக்குள் மீண்டும் சிக்கல் ஏற்பட்டுள்ளதால் தமிழரசுக் கட்சியைப் புதிப்பிக்கும் தேவை ஏற்பட்டது. அவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இணைந்து தமிழ்மக்களின் விடுதலைக்கான கொள்கைகளை முன்னிறுத்திச் செயற்படுகிறார்கள். தொடர்ந்தும் அக்கொள்கைகளுடன் செயற்படுவார்களாக இருந்தால் நானும் இணைந்து செயற்படுவேன்.

செவ்வி:
**வசந்தன், கிருஷ்ணா**

விடுதலைப் புலிகள் போர்களத்தில் குதித்துப் போராடுகின்றபோது அவர்களுக்குப் பக்கபலமாக அரசியல் ரீதியாக அவர்களுடைய பலத்தை அதிகரிக்கவேண்டும்.

தமிழரசுக்கட்சி சீராகச் செயற்படுமாக இருந்தால் தமிழீழ விடுதலை அணியைப் புதுப்பிக்க வேண்டிய தேவையே இல்லை.

*கேள்வி:-* ஸ்ரீலங்கா நாடாளுமன்றம் ஊடாக தமிழ் மக்களுக்கு எந்த விமோசனமும் கிடைக்கப்போவதிலலை

(07ஆம் பக்கம் பார்க்க)

---

# வறுமை நிவாரண முத்திரை இம்முறை வழங்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,ஏப்.14

யாழ். குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கான வறுமை நிவாரண முத்திரை இம்முறை வழங்கப்படவில்லை.

வறுமை நிவாரணமுத்திரை பெறுபவர்களுக்கு இம்முறை பட்டியல் மூலம் நிவாரணம் வழங்க பிரதேச செயலகங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

இதேவேளை -

உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக மீளக்குடியமர அனுமதிக்கப்படாத மக்களுக்கும் இராணுவம் வீடுகளில் நிலை கொண்டுள்ளமையினால் மீளக்குடியமராத மக்களுக்கும் மட்டுமே நிவாரணமுத்திரை வழங்கப்பட்டு வருகின்றது.

வெகுவிரைவில் தகுதியானவர்களுக்கு நிவாரண முத்திரைக்குப் பதிலாக சமுர்த்தி உதவித்திட்டம் மேற்கொள்ளப்படுவதற்கு வசதியாகவே நிவாரண முத்திரை வழங்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

(ஐ-68)

### வானில் இருந்து குதித்த இளைஞன் காயம்!

ஓடிக்கொண்டிருந்த வானை நிறுத்துவதற்கு முன்னர் அதிலிருநது இறங்க முற்பட்ட இளைஞர் மின்கம்பத்துடன் மோதி காயமடைந்தார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கல்வயல் பகுதியில் இடம்பெற்றது.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி சதீஸ்வரன் (வயது19) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

(ஐ-117)

# கோப்பாய் தரவையில் புதைந்துள்ள மிதிவெடிகளை அகற்றி உதவுக

## விவசாய சம்மேளனம் மீண்டும் கோரிக்கை

கோப்பாய்,ஏப்.14

கோப்பாய் தரவையில் அமைந்துள்ள உவர் நிலப்பரப்பில் காலபோகத்திலாவது அதிகளவு நிலப்பரப்பில் நெல்லைப் பயிரிட வசதியாக அங்கு புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடி, மிதிவெடிகளை அகற்றித் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் மத்தி வடக்கு விவசாய சம்மேளனத்தினரும், கோப்பாய் சமூக சேவா சங்கத்தினரும் இணைந்து சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த வருடமும் கோப்பாய் பிரதேச செயலர், யாழ். அரச அதிபர், கமநலசேவை உதவி ஆணையாளர், விவசாய ஆராய்ச்சிப் பொறுப்பதிகாரி, விவசாய உதவிப்பணிப்பாளர் ஆகியோரிடம் நாம் இது விடயமாக பலதடவைகள் கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

குறிப்பிட்ட பிரதேசத்தில் காலபோகச்செய்கையை மேற்கொள்வதற்கு வசதியாக அடுத்த மாதத்திற்குள்ளாவது கண்ணிவெடி, மிதிவெடிகளை அகற்றித் தருமாறு மீண்டும் கோருகின்றோம்.

(எ-72-7)

# கட்டட வசதி இன்மையால் மாதர் சங்கப் பணிகள் முடக்கம்

கோப்பாய்,ஏப்.14

கோப்பாய் மத்தி மாதர் முன்னேற்றச் சங்கத்தினர் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற போதிலும், தமக்கு நிரந்தர கட்டட வசதி இன்மையால் சில செயற்பாடுகளை நிறைவாக மேற்கொள்ள முடியாதிருப்பதாக கவலை தெரிவித்துள்ளனர்.

தமது சங்கத்தில் 250இற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் இணைந்து பல்வேறு நன்மைகளை அனுபவித்துவரும் வேளையில், கட்டடவசதி இன்மை பெரும் குறைபாடாக உள்ளது.

தற்போது சுயதொழில் கடன் வழங்கல், பன்னவேலைப்பயிற்சி, தையல் பயிற்சி என்பன வழங்கப்பட்டு வருகின்றது.

குறிப்பாக, பயிற்சி நெறிகளை வழங்குவதில் இடவசதியின்மை பெரும் சிரமத்தை ஏற்படுத்துகின்றது - என்று மாதர் சங்க வட்டாரங்கள் கூறின.

(எ-72)

# இலங்கையில் பலம்வாய்ந்த அரசை உருவாக்க இந்தியா முயற்சி

கொழும்பு,ஏப்.14

சகல கட்சிகளும் இணைந்த பலம்வாய்ந்த அரசொன்றை இலங்கையில் நிறுவும் முயற்சியில் இந்தியா தலையிட்டுள்ளதாக தூதரக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் இதுதொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோருடன் பல்முறை பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

அண்மையில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுகளின்போதும் இதுபற்றி கலந்துரையாடப்பட்டுள்ளபோதும் மேலதிக தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

இலங்கையில் ஸ்திரமற்ற அரசு அமைவது இந்திய அரசியலில் விரும்பத்தகாத விளைவுகளை உருவாக்கக்கூடுமென இந்திய அரசு கருதுவதே இந்தத் தலையீட்டுக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்த யோசனை தொடர்பாக இலங்கையின் முக்கிய அரசியல் கட்சிகளின் கருத்துக்களை இந்தியா விரைவில் எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(எ-8)

## வேகம் விவேகம் அல்ல!

சாரதி பயிற்சியளிப்பதில் 25 வருட அனுபவம் பெற்றவர்களிடம்

**வான் சாரதி பயிற்சி பெற 30 நிமிடங்களுக்கு ரூபா: 400/= 30. 04. 04 வரை**

பெண்களுக்கு பெண்களே பயிற்சியளிப்பர்

தொடர்பு: S.V. குணபாலன்

239, பிரதானவீதி, யாழ்ப்பாணம், தொ.பேசி: 2225844



### புத்தாண்டு விசேட சலுகை

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுடன் பேசி மகிழ விசேட சலுகை.

ஒரு நிமிடத்திற்கு கட்டணம் 5/=

இச்சலுகை 12.04.2004 தொடக்கம் 16.04.2004 வரை மட்டுமே

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**

303, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்

T.P: 021 222 2670, Fax:021 222 3214,

E.Mail: del-smskr@eureka .lk


# மரண அறிவித்தல்கள்

## P.C.யோகேந்திரன்



யாழ்ப்பாணம், கண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும், 261/11,கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட P.C.யோகேந்திரன் (முன்னாள் ஊழியர், C.T.B. யாழ்ப்பாணம்,SATA LLC - Muscat OMAN) அவர்கள் 11.04.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து பிலிப்ஸ் - சுசினா பிலிப்ஸ் (தங்கம்) ஆகியோரின் அன்பு மகனும் சுகிர்தாவின் பாசமுள்ள கணவரும் சதீஸ், ஆனந்த், பிரதீஸ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இராஜேந்திரா, ஜெயவதி மனுவேற்பிள்ளை, நரேந்திரா, காலஞ்சென்ற மகிழ்வதி ஜோசப் மற்றும் பாலேந்திரா, காலஞ்சென்ற புகழ்வதி இராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வசந்தா அலோசியஸ் மற்றும் ரஞ்சினி ஜெந்திஸ்நாதன், காலஞ்சென்றவர்களான ஜோன் கனகரட்ணம், திருமதி அரியமலர் பஸ்தியாம்பிள்ளை மற்றும் திவ்வியம் கனகரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாருடைய நல்லடக்க ஆராதனை இன்று (14.04.2004) புதன்கிழமை பி.ப.4 மணியளவில் பாண்டியன்தாழ்வு புனித சந்தானமாதா கோவிலில் நடைபெற்று, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

261/11.கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (30810)(34-14-26-13)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## பண்டாரி வேலாயுதம்



வேரற்கேணி, தென்மட்டுவில், சாவகச்சேரியைச் சேர்ந்த சின்னத்தம்பி பண்டாரி வேலாயுதம் நேற்று முன்தினம் (12.04.2004) கனடாவில் காலமானார்.

அன்னார் சிவயோகத்தின் கணவரும் கருணாநிதி, தயாநிதி, நகுலாம்பிகை, லலிதாம்பிகை (கனடா), சர்வாம்பிகை (சர்வா), விமலாம்பிகை (பபி), தயாநிதி (தயா), ஜெயாநிதி (ராசன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் எஸ்.பி.கிருஷ்ணன், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, ஈச்சம்மா, பவளம்மா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குறிப்பு:

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் "நகுலவாசா" மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி இல்லத்தில் இன்று 14.04.2004இல் நடைபெறும்.

'நகுலவாசா', மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (30835) (14-13-26)

தகவல்: பிள்ளைகள்.

## ரவிராஜ் பிறிஜிற் (Brigite)

சுவிஸ் நாட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ரவிராஜ் பிறிஜிற் 09.04.2004 வெள்ளிக்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் சுன்னாகத்தை பிறப்பிடமாகவும்,சுவிஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ரவிராஜின் அன்பு மனைவியும் சத்தியராஜ், ஜெயராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சிமகேஸ்வரி (ஆசிரியை), சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற CTB நடத்துநர்) ஆகியோரின் அன்பு மருமகளும் சிவா (இந்தியா), ரவிலா (இந்தியா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க நிகழ்வு நாளை (15.04.2004) வியாழக்கிழமை Beundenweg 43 2503 Biel Swiss இல் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

தகவல்: சி.சுப்பிரமணியம் (மாமனார்), சு.ரவிராஜ் (கணவர்) (Swiss). T.P:0041323658113.

சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். (30839) (14-13-26)

## தென்னை மரத்தில் இருந்து தவறிவிழுந்து காயம்!

தென்மராட்சி,ஏப்.14

இளநீர் பிடுங்க மரத்தில் ஏறிய இளைஞர் தவறி வீழ்ந்து காயமடைந்த சம்பவம் நேற்றுக் காலை அல்லாரை தெற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கணேசபிள்ளை சுகந்தன் (வயது-20) என்பவர் கைமுறிந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(எ-117)

## மீசாலையில் குடும்பஸ்தர் மீது தாக்குதல்!

தென்மராட்சி, ஏப்.14

வீதியில் சென்ற குடும்பஸ்தர் மீது இனந்தெரியாத கும்பல் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் சம்பவம் கடந்த ஞாயிறன்று இரவு மீசாலையில் இடம்பெற்றது.

கண்மீது தாக்குதல் நடத்தப்பட்டதால் குடும்பஸ்தர் கண்ணை இழக்கும் ஆபத்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவகுமார் (வயது-37) என்பவரே கண்ணில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

(எ-117)

## பாலர் பகல் விடுதிக்கு புதிய கட்டடம்

.கோப்பாய்,ஏப்.14

கோப்பாய் வடக்கு சமூக சேவா சங்கத்தினர் நடத்திவரும் பாலர் பகல் விடுதிக்கென 19லட்சம் ரூபா செலவில் சகல வசதிகளும் கொண்ட புதிய கட்டடம் ஒன்று வடக்கு - கிழக்கு மாகாண சமூக நலத் துறைத் திணைக்களத்தினால் நிறுவப்படவுள்ளது.

(எ-72)


### தவறிவிட்டன

யாழ்ப்பாணம், பெரியகடை வீதி, மகாராணி புடைவைக் கடைக்கு முன்வால் பல லட்சம் ரூபா பெறுமதியான காசோலைகளும், பல லட்சம் பெறுமதியான கடன் சீட்டைகளும் அடங்கிய கைபை 12.04.2004 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

A.S.N. விருதி, இல.392.மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.

T.P: 021-222 3181, 5399. (30840)



### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள
கம்பி மிசின்
தகடு மிசின்
2 டை மிசின்
1 கட்டிங் மிசின்
350 டை அச்சுக்கள்
விற்பனைக்கு உள்ளன
எம்மிடம் தரமான உரைகல் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு - 51, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம், T.P- 0777 245965. (30813)


## கண்ணீர் அஞ்சலி

எமது நல்லூர் லயன்ஸ் கழகத்தின் அங்கத்தவர் லயன் சி. வீரசுத்திப்பிள்ளை (சட்டத்தரணி) அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சின்னத்துரை இலட்சுமி**

அவர்கள் 06.04.2004 அன்று இயற்கை எய்தியமை குறித்து நாங்கள் மிகவும் கவலையடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து, ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(C/34458) (13-14-26) நல்லூர் லயன்ஸ் கழகம்.


## உத்தியோகத்தர் தேவை

நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் பணிபுரிவதற்கு 40 வயதிற்கு மேற்பட்ட ஆண் உத்தியோகத்தர் தேவை. கல்வி அறிவும் சைவ ஒழுக்கமும் உடையவராக இருக்கவேண்டும். மண்டபத்துக்கு அணித்தாக இருப்பவர் விரும்பத்தக்கது. வேலை நேரமும் சம்பளமும் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். விண்ணப்பங்களை

"தலைவர் அவர்கள்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை"

என்ற விலாசத்துக்கு 21.04.2004இற்கு முன்பாக அனுப்பிவைக்கவும்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி,
தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, ஸ்ரீலங்கா.

(சி-34459) (24-13-14-26)


## பிற்போடப்பட்டுள்ளது

சிவசக்தி சனசமூக நிலைய முன்பள்ளி வளர்ச்சி நிதிக்கான

**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு**

15.04.2004இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த மேற்படி எமது நிலையத்தின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் வேறொரு திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

திகதி பின்னர் பத்திரிகை மூலம் அறியத்தரப்படும்.

நிர்வாகத்தினர், சிவசக்தி சனசமூக நிலையம்.

(30836) (13-14-26)


## UNIVAC

**College of Computer Information Technology**
Affiliated to Bangalore University

## Scholarship 2004

1998ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யுனிவெக் கணனித் தகவல் தொழில்நுட்பக் கல்லூரி ஆறு ஆண்டுகள் நிறைவுடன் இன்று பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மாணவர்களுக்கு பல புலமைப்பரிசில்களை வழங்குகின்றது.

**கணனிக்கல்வியில் புலமைப்பரிசில்**

- 2003 O/L பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற 1000 மாணவர்களிற்கு 100% புலமைப்பரிசிலும்
- 2003A/L பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற 1000 மாணவர்களிற்கு 100% புலமைப்பரிசிலும் கிடைக்கும்

**பல்கலைக்கழக அனுமதியில் புலமைப்பரிசில்**

- பெங்களூர் பல்கலைக்கழகத்தின் B.Sc.,BCA,BBM ஆகிய பட்டப்படிப்பிற்கான அனுமதியில் புலமைப்பரிசில்

**விண்ணப்ப முடிவு திகதி: 17.04.2004**

இத்திகதிக்கு முன்னர் பதிவுசெய்யும் மாணவர்களுக்கு மட்டுமே புலமைப்பரிசில் கிடைக்கும்.

(26-14-13) (30807)


| | | |
|---|---|---|
| Milk white K.K.S.Road, Jaffna. | Near AGA Office, Chankanai. | Udayarkaddu, Mullaitivu. |
| Vipulanantha College Rd, Vavuniya. | Vaddukkoday Rd, Sithankerney | Bangalore - 11, INDIA |


## ஓராண்டு நினைவஞ்சலி

### அமரர் செல்லையா சபாபதி

(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன பிரிவு உதவியாளர், கைதடி - நாவற்குழி)

திதி: 14.04.2004 (தசமி)



ஆளுமையின் பெருமகவாய்
கணவன், தொண்டன், தந்தை எனும்
பதங்களின் இலக்கணமாய்
கனிவாய், கண்டிப்பாய் கல்வியுடன்
உடவுளவுறுதி தந்து
வாழ்வுப் பயண ஆழம் சொல்லி
எமைத் தழைத்தோங்க விட்டவரே
சந்ததியாய்த் தழைக்கும் என்றும் உம் நினைவு.

இன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு உறவினர்கள், நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

இல.179B, "சபாபதி பவனம்", உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி. (30838)(13-14-26)

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் மனைவி, பிள்ளைகள்.

மலர்வு 02.07.1938 உதிர்வு 25.04.2003

# இலங்கை இனவிவகாரத்தில்...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்று அடிக்கடி அடித்துக் கூறிவந்திருக்கிறீர்கள். இப்போது அதே நாடாளுமன்றத்திற்கு உறுப்பினராகச் செல்கின்றீர்கள். நாடாளுமன்றத்தில் உங்கள் நிலை எப்படி இருக்கப்போகிறது.

இம்முறை நடைபெற்றது தேர்தல் அலல. மக்கள் அளிக்கின்ற கணிப்பு, அதாவது, அவர்கள் ஆத்மார்த்த ரீதியாகத் தமிழ்த் தேசத்திற்கு வழங்கியுள்ள உறுதியான தீர்ப்பு. அதற்கேற்ற வகையில் எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அழுத்தம் கொடுக்கும் களமாக நாடாளுமன்றத்தைப் பயன்படுத்துவோம்.

நாடாளுமன்றத்தில் நாம் எவருமே வெட்டி விழுத்திச் சாதிப்பதற்கு ஒன்றும் இல்லை. தந்தை செல்வா, வன்னியசிங்கம், இரும்பு மனிதர் டாக்டர் நாகநாதன் மற்றும் அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் ஆகியோரைவிட நாம் பேசிச சாதிக்கப்போவது ஒன்றுமில்லை என்பது எமக்கு நன்றாகத் தெரியும் இருப்பினும், மக்கள் அளிதத தீர்ப்பை ஒரு கருத்துக் கணிப்புக்காக ஏற்றே நாம் நாடாளுமன்றம் செல்கின்றோம்.

நாம் நாடாளுமன்றம் செல்லுகின்றோம் என்பதனைவிட யார் போகக் கூடாது என்பதுதான் எமது முக்கிய நோக்கம். அதில் கவனமாக இருந்தோம்; வெற்றியும் கண்டோம்.

தேர்தலில் நாம் கலந்துகொள்ளாது விட்டிருந்தால் ஆனந்தசங்கரி போன்ற பச்சோந்திகள் ஒரு சில நூறு வாக்குகளுடன் நாடாளுமன்றம் சென்றிருப்பார்கள். இது எமது இனத்திற்கு மீள முடியாத அழிவைத் தந்திருக்கும்.

ஆனாலும், நிறைகுடம் பாலில் ஒரு துளி நஞ்சாக டக்ளஸ் தேவானந்தா நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுவிட்டார். இது எனக்கு மிகுந்தவேதனை அளிக்கிறது.

*கேள்வி:-* தற்போது கிழக்கில் உருவாகி இருக்கும் கருணா விவகாரம் பற்றித் தங்கள் கருத்து என்ன?

இது ஓர் உள்வீட்டுப்பிரச்சினை. இதில் தலையிட எமக்கு அதிகாரமில்லை. இருந்தாலும், கருணா என்ற தனிநபரின் செயற்பாட்டால் தமிழ்மக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படப் போவதில்லை.

கருணாவின் பிரதேச வாதத்தை மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மக்கள் முற்றாக நிராகரித்து விட்டார்கள். இதனை நடந்துமுடிந்த தேர்தல் முடிவுகள் மூலம் உணரக்கூடியதாக உள்ளது. தமிழ்த் தேசியம், சுயநிர்ணயம், மரபுவழித் தாயகம் என்பவற்றுக்கு ஆதரவாக வாக்களிக்கவேண்டாம் எனக் கருணா கடும் உத்தரவைப் பிறப்பித்திருந்தபோதும் மக்கள் அந்த உத்தரவை நிராகரித்துள்ளனர்.

கருணாவின் செயற்பாட்டிற்குப் பின்னால் இந்தியாவின் தலையீடு இருப்பதாக எண்ணத்தோன்றுகின்றது. இல்லாதுவிட்டால் தனிமனிதனான கருணா இவ்வாறு பொறுப்பற்ற விதமாகச் செயற்படமாட்டார்.

எது எவ்வாறு இருப்பினும் மிக விரைவில் இதற்கு ஒரு முடிவு காணப்படும். அதன் பின்னர் நாம் ஒன்றாக இணைந்து செயற்படக்கூடிய சூழ்நிலை தோற்றுவிக்கப்படும்.

*கேள்வி:-* யுத்தம் ஏற்பட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன?

எமது தலைவர் பிரபாகரன் எதனைச் செய்கின்றாரோ அதற்கு நாமும் உதவியாக இருப்போம். தமிழினம் தப்பிப் பிழைக்கவேண்டும் என்றால் களத்தில் குதிக்கவும் தயாராக இருக்கின்றோம். அந்தநிலையில், பிரபாகரன் என்ன கட்டளை இடுகிறார் அதனை ஏற்கவும் நாம் தயார். அதுமட்டுமல்லாது, நாடாளுமன்றப் பதவிகளை தூக்கி வீசவும் தயங்கமாட்டோம். தலைவருடைய ஆணையை மீறி யார் செயற்பட்டாலும் அவர்களுடைய எதிர்காலம் கேள்விக் குறியாகவே இருக்கும். அதற்கு விதிவிலக்கானவர்கள் அல்லர்.

நாம் விடுதலைப் புலிகளின் தூதுவர்களாகச் செல்கின்றோம். நாம் எந்த அரசுடனும் சேரப்போவதுமில்லை; அமைச்சுப் பதவிகளை ஏற்கப்போவது மில்லை.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சிக் கோரிக்கையைக் குறுகிய கால அவகாசத்துடன் நிறைவேற்றவேண்டும். அந்தக்கால கட்டத்தில் மட்டும் நிபந்தனையுடன் ஆதரவு வழங்குவோம். இல்லாதுவிட்டால் நாம் நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறி விடுவோம்.

*கேள்வி:-* தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் எதிர்காலத்தில் பிளவுகள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டா?

*பதில்:-* மனிதன் திருந்திவிட்டான். தற்போது எம்முடன் இணைந்தவர்களின் தன்னிச்சையாகச் செயற்படக் கூடியவர்கள் எவரும் இல்லை. தமிழ்த் தேசியத்தின் கோரிக்கையை நிறைவேற்ற எல்லோரும் ஒன்றுசேர்ந்து குரல் கொடுப்போம். தேவையை ஒட்டி களத்தில் இறங்கியும் அஹிம்சை வழியாகப் போராடுவோம்.

உயர்பாதுகாப்பு வலயம், காணாமற்போனோர் பிரச்சினைகள் மற்றும் மனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டும். நாம் எமது வீடுகளுக்குச் செல்ல படையினர் தமது வீடுகளுக்குச் செல்லவேண்டும். இவற்றை வலியுறுத்தி அஹிம்சை ரீதியான போராட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளோம்.

அதுமட்டுமல்ல, மறந்தும் தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்ய நினைத்தால் உயிரோடு வாழ்வதற்கும் தகுதி அற்றவர்கள் ஆவோம் - என்றார்.

★


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட டாக்டர்கள் சிபார்சு செய்வது

றோயல் குளுக்கோஸ்

100/% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:- Royal Industries, Colombo. ☎ 0112334603




ஏக விநியோகத்தர்கள்

சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎: 021 222 2567

சத்திரத்துச் சந்திக்கு அருகில்



பண்டிகைக் கால விசேட சலுகை

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவுகளுடன் பேசி மகிழ விசேட சலுகை.

ஒரு நிமிடத்திற்கு கட்டணம் 5/=

இச்சலுகை 11.04.2004 தொடக்கம் 16.04.2004 வரை மட்டுமே

திருமுருகன் கொம் நெற்

46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச.முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்.

T.P: 021 222 7310, 7555, 7560

Fax:021 222 7310,

E.Mail: thirumurugan@edoramail.com



மனோதத்துவ வைத்தியம்

(GENERAL PSYCHO THERAPHY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்....!

14.04.2004 முதல் 20.04.2004 வரை

இளைஞர்களே!

★ சக்தி குறைவு ★ ஞாபக மறதி ★ பயம்
★ நடுக்கம் ★ நித்திரை குறைவு

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்கப்படும்.

என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

தொடர்புகொள்ளவும்:

குறிப்பு:. *இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.*

தொடர்புகளுக்கு:

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம் S.M.P.

A.S.N. சுற்றுலா விடுதி,

392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).

Govt. Regd. No. 9492

Hot Line: 0777 569205

T.P.: 3181, 5399

(சி-34495)(14-26)


## ஓராண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 1981 - 07 - 16



இறைவன் அடியில் 2003 - 04 - 26

**செல்வி சங்கீதா செல்வலிங்கம்**

(2ஆம் வருட மாணவி, யாழ். பல்கலைக்கழக கலைப்பிரிவு)

திதி:14.04.2004

ஆண்டொன்று ஆகிடினும் ஆறவில்லை எம்துயரம்
நீண்டதோர் சோகம் நிலைத்திடவே நீ வைத்தாய்
பூண்ட நல் அன்பால் புலம்புகின்றோம் சங்கீதாவே!
மீண்டு நீ எப்போ எம்மிடையே வருவாய்.

*செல்வலிங்கம்,*
*ஐயனார் கோயிலடி,*
*மகாத்மா வீதி, கரவெட்டி.*

(30804)(14-26)

*பிரிவால் துயருறும்:*
குடும்பத்தினர்.

## நலம்பெற வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்



இந்து கலாசார சமய விவகார அலுவல்கள் அமைச்சின் முன்னாள் அமைச்சரான மாண்புமிகு

**தியாகராசா மகேஸ்வரன்** (M.P.)

(நாடாளுமன்ற உறுப்பினர்)

அவர்கள் கடந்த 27.03.2004 சனிக்கிழமை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார் என்பதைக் கேள்வியுற்று அதிர்ச்சியும் மனவேதனையும் அடைகின்றோம்.

இவர் இந்து கலாசார அமைச்சராக இருந்த காலத்தில் பிரான்பற்று மக்களுக்குச் செய்த உதவிகளையும் சேவைகளையும் மறக்கவே மாட்டோம். ஆகவே, அவர் பூரண சுகமடைந்து மீண்டும் மக்கள் சேவையில் இணைய எல்லாம் வல்ல முருகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரான்பற்று,
பண்டத்தரிப்பு.
(சி-34433) (26-14)

- நாவலர் சனசமூக நிலையத்தினரும்,
பிரான்பற்று வாழ்மக்களும்.

## நீங்காத நினைவு 15ஆம் ஆண்டு



**S.T.சந்திரகுமார்**

(கிராமசேவையாளர், கரம்பொன்)

அழிப்பு:1989.04.14

ராசா மகனே தம்பி உமது முகம் காணாது
பதினைந்து வருடங்கள் ஆகிவிட்டன!
ஆனால் உமது தோற்றம் எங்களின் கண்கள்
முன்னே தோன்றி மறைகின்றன. நீர் சேவையாற்றிய
கரம்பொன் மக்கள், உத்தியோகத்தர்கள்
உம்மை மறக்கவில்லை.

*17/01, ரயில்வே வீதி,*
*கச்சேரி நல்லூர் றோட்,*
*யாழ்ப்பாணம்.*

(30643) (14-26)

*உமது நினைவில:*
அம்மா: செ.பாக்கியம்
அக்கா: S.T.சகுந்தலாதேவி

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### தேவை

ரொயாற்றா ரவுண்ஏஸ் 150 CC வாகனத்திற்குப் பொருத்தக்கூடிய அலுமினியம் பொடி (BODY) தேவை. தொடர்பு: ச.பிரதாப், 62/4, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 7218 (30833)

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பம், அழகான 38 வயது மணமகள், நவீன வசதியான வீடு, பல காணிகள், 25 ஏக்கர் கிளிநொச்சி மாவட்ட நெல் வயல், நல்ல வங்கி இருப்பிற்கும் சொந்தமான ஒரே மகளிற்கு (சகோதரர்கள் நல்ல நிலையிலுள்ளனர்) பொருத்தமான உத்தியோக / ஆசிரிய / நன்நிலை தனியார் நிறுவன உரிமையாளரான மணமகன் தேவை. தொடர்பு: விள.இல. 2222. மே/பா உதயன். (30608)

### விற்பனைக்கு

தரமான நம்பர் 1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் 16.04.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.: 222 2867. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (30791)

யாழ். பிரதான வீதி, மக்கள் வங்கிக்கு அண்மையில் 3ஆம் குறுக்குத் தெருவில் 2 பரப்புக் காணியுடன் இரண்டு வீடுகள் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: சேகர், T.P.: 0777 171745. (30808)

## சோமஸ்கந்தாவில் மணிமண்டபம்

யாழ்ப்பாணம்,ஏப்.14

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் குமாரசாமி நினைவாக மணிமண்டபம் ஒன்று நிறுவப்படவுள்ளது.

மேற்படி கல்லூரியில் 1949ஆம் ஆண்டு தொடக்கம் 17வருடங்கள் அதிபராகக் கடமையாற்றி மறைந்த அதிபரைக் கௌரவிக்கும் முகமாக இந்த மண்டபம் நிறுவப்படவுள்ளது என கல்லூரி அதிபர் வ.ஆறுமுகம் தெரிவித்துள்ளார்.

மண்டபத்தை நிறுவுவதற்கான உதவிகளைக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் வழங்கும் என்றும் - அவர் தெரிவித்தார். (எ-7)

## பிராந்திய ஆணையாளராக மீண்டும் நியமனம்

கைதடி,ஏப்.14

வடக்கு - கிழக்கு மாகாண சபையின யாழ்ப்பாணப் பிராந்திய ஆணையாளராக திருமதி பத்மினி சிவலிங்கம் மீளவும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஒப்பந்த அடிப்படையிலான இந்த நியமனம் ஒரு வருடத்தைக் கொண்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-75)

## சாவகச்சேரி நகரப் பகுதிக்குக் குடிதண்ணீர்

தென்மராட்சி,ஏப்.14

சாவகச்சேரி நகரப்பகுதிக்கான குடிதண்ணீர் விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கென வடக்கு அவசர புனர்வாழ்வுத் திட்ட நிறுவனத்தினரால் (நீர்ப்) நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத் தின்கீழ் சாவகச்சேரி நகரப் பகுதிக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை, நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேதமடைந்த கிணறுகள் புனரமைக்கவென 13லட்சத்து 60ஆயிரம் ரூபா ஒதுக்கியுள்ளதாகவும் தெரிவிக்கபட்டது. (ஐ-117)

### வேலையாள் தேவை

மென்பான நிறுவனமொன்றுக்கு நாளாந்த வேலைக்கு சோடா ஏற்றி இறக்க வேலையாள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். காலை 8 மணிக்கு கடமைக்கு வரக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
தொடர்பு:
A.அழகு,
237, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்
(பிலிப் நேர்சிங் ஹோம் முன்பாக)
T.P.: 0777-589608.
(30805)(26)


புத்தாண்டை முன்னிட்டு மலிவு விலையில்!
புத்தம் புதிய MP3, பாடகர்களின் MP3, புதிய V.C.D, ACD, பக்திப்பாடல் MP3, Reemicx A.C.D, V.C.D, MP3, பழைய பாடல்கள் V.C.D, A.C.D, MP.3, இன்னும் பற்பல!
நான்கு CD வாங்குபவர்களுக்கு ஒரு CD இலவசம்.
ரூபா 90/= மட்டுமே
தொடர்பு:
ரேகா ஓடியோ வீடியோ சென்ரர்
கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோவிலடி. 0777 252081, 0777 592566
(30822) (40-13-12-24)



CATWAS. COM
Computer Academyயில் அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க சிங்கள, தமிழ் புதுவருடத்தை முன்னிட்டு அடுத்த பிரிவு 01.05.2004 அன்று ஆரம்பம்.
Diploma Courses
Ms office 1,000/-
DTP 1,500/-
Hardware 1,500/-
Web page 1,500/-
இப்பிரிவில் இணையும் மாணவர்களுக்கு அனுமதிக் கட்டணம் முற்றிலும் இலவசம்.
26, Somasundaram Avanue, Chundukulli, Jaffna. T.P.: 021 222 3805
(30823) (24-12-14)



நெல்லை சில்க்
- நெல்லியடி -
புதுவருடத்திற்கான விசேட பட்டுச்சேலைக்கான அதிர்ஷ்ட எண் 1801.
வாடிக்கையாளருக்கு எமது புதுவருட வாழ்த்துக்கள்.
சி.அகிலன்
உரிமையாளரும், ஊழியர்களும்.
(சி-34463) (24-12-14)



பாராட்டும் வாழ்த்தும்

செல்வன்
செல்லையா பன்னீர்ச்செல்வன்
புத்தூர் வடக்கைச் சேர்ந்த யாழ். விஞ்ஞானபீட மாணவன் கடந்த 27.03.2004 அன்று நடந்துமுடிந்த 23ஆவது பட்டமளிப்பு விழாவில் விஞ்ஞானமாணி (B.Sc.) பட்டம் பெற்றமையை இட்டு இவரை மனமார வாழ்த்துகின்றோம்.
புத்தூர் வடக்கு, புத்தூர்.
வாழ்த்துபவர்கள்: செ.நகுலேஸ்வரன், த.சண்முகநாதன், க.சுசிகரன், பொ.ஜெயஸ்கரன்.
(30834) (24-12-14)



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்கள்!
Beauty Centre
For Ladies
Mrs.Gowri Rajendraprasad
Beautician
(Dip. in H.Ecom., Dip. in Beauty Centre)
(Dip. in Herbal beauty of Beauty Therapy)
"Rajastan" சிவராஜா அவென்யூ
பலாலி றோட், திருநெல்வேலி
(தபாற்பெட்டிச் சந்தி, புதுக்கடைகள் முன்).
Contact No: 222 2982
Mobile: 077 6057273
(30762) (24-12-14)




New Courses
Direct Start
Dip. in Web Designing
Dip. in Desktop Publishing
Dip. in Accounting Backages
Dip. in MS Office
Dip. in Hardware Technology
Certificate Courses
C++ (Language)
AutoCAD
Java Programming
Pascal
Visual Basic
Internet & email

STP Your Partner in IT solution
73, Palaly Road, Kantharmadam, T.P:021-222-2674



துயர் பகிர்கின்றோம்
எமது பாடசாலை ஆசிரியரான திரு.நவரட்ணம் லிங்கேஸ்வரன அவர்களின் அன்புத் தந்தையார்
ஆறுமுகம் நவரட்ணம்
(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)
அவர்கள் 11.04.2004 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார். அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு ஆத்மா சாந்தி பெறவும் பிரார்த்திக்கின்றோம்.
யா/வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம். புத்தூர். - அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
(30820) (26-12-13-24)



நலம் பெறப் பிரார்த்திக்கின்றோம்

முன்னாள் இந்து கலாசார அமைச்சராக இருந்து மக்களுக்கு அரிய பெரிய தொண்டாற்றிய
திரு.தியாகராசா மகேஸ்வரன்
அவர்கள் பிரசாரக் கூட்டத்தில் ஈடுபட்டபோது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளார்.
அன்னார் உடல் நலமும் வெற்றியும் பெற்று மேன்மேலும் மக்களுக்கு அரிய பல சேவைகளாற்ற இமையாணன் ஸ்ரீமுருகனை இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றோம்.
இமையாணன் ஸ்ரீமுருகன் ஆலய பரிபாலனசபை.
(30794)(12-13-24)



மனமுவந்து வாழ்த்துகின்றோம்
யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த 27.03.2004 சனிக்கிழமை நடைபெற்ற 23ஆவது பட்டமளிப்பு விழாவில்
துரைரட்ணம் ஜெயதீபன்

அவர்கள் நுண்கலைமாணி பட்டம் பெற்றமையையிட்டு அவரை மனமுவந்து உவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புற இறைவனை வேண்டுகின்றோம்.
யாழ்ப்பாணம். - அன்பு நண்பர்கள்.
(30771) (12-14-24)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

விவசாயம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, இந்துசமய விவகாரம், தமிழ்மொழி பாடசாலை (வடக்கு) தொழிற்பயிற்சி அமைச்சராகப் பதவியேற்றுக்கொண்ட கௌரவ அமைச்சர்
கே.என்.டக்ளஸ் தேவானந்தா (நா.உ.)
அவர்களுக்கு எமது மனப்பூர்வமான பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளும்
நன்றியுள்ள
மானிப்பாய் மக்களும், ஆதரவாளர்களும்.
(30779) (12-14-24)



கலாநிதி அருட்கவியே வையத்து நீடுவாழ்க!

டாக்டர் அருட்கவி
சீ.விநாசித்தம்பி M.A.
ஐயா அவர்களின் அருள் வழிகாட்டல், சமூக, சமயப்பணிகள், தான்தோன்றிக் கவித்துவ ஆற்றல் என்பவற்றின் பெருமைகளுக்கு மதிப்பளித்து தற்காப்புக் கலைஞர்களுக்கான ஜப்பானிய உள்ளகப் பல்கலைக்கழகம் 28.03.2004இல் ஐயா அவர்களுக்கு கலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளது.
சகலகலாவல்லவராகிய எங்கள் புலவர் பெருமான் இன்னும் பல பட்டங்கள் பெற்று எமது நாட்டுக்குப் புகழ் சேர்க்க இறையருளை வேண்டுகின்றோம.
~ உரிமையாளரும் ஊழியர்களும்.
ஸ்ரீவாணி விலாஸ் சைவ உணவகம்.
இல.144,கண்டி வீதி, வவுனியா. T.P:024 4589777
இல.372,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P:071 2370211
(C/34462) (12-14-24)




உ
சண்டிலிப்பாய் சீரணி
அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
தாரண வருஷ மஹோற்சவ விஞ்ஞாபனம் -2004

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 24.04.2004 | சனிக்கிழமை காலை 10.30 மணி |
| கப்பற்திருவிழா | 28.04.2004 | புதன்கிழமை இரவு |
| சப்பரத் திருவிழா | 03.05.2004 | திங்கள் இரவு |
| ரதோற்சவம் | 04.05.2004 | செவ்வாய் பகல் 10 மணி |
| தீர்த்தோற்சவம் | 05.05.2004 | புதன் பகல் 9 மணி |
| பூங்காவனத் திருவிழா | 07.05.2004 | காலை 9 மணி சங்காபிஷேகம் இரவு பூங்காவனம். |

மு.கு.: 17.04.2004 சனிக்கிழமை காலை 10 மணிக்கு கடைகள் ஏலத்தில் விடப்படும். கடை எடுப்பவர்கள் முழுப்பணத்தையும் செலுத்திப் பதிவுசெய்துகொள்ளவும்.
தனமும் அம்பிகை அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். அடியார்கள் வருக திருவருள் பெறுக.
சீரணி, சண்டிலிப்பாய்
தர்மகர்த்தா சபையினர்
(30816) (40-12-14-24)

மானிப்பாய் றோட்டறக்ட் கழகம்
நடத்தும் க.பொ.த. உயர்தரமாணவர்களுக்கான
இலவச பரீட்சை வழிகாட்டி

# கருத்தரங்கு - 2004

**கலைப்பிரிவு**

இடம்: யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
காலம்: நாளை (15.04.2004) வியாழன்
அளவையியல் - திரு. S.S.மனோகரன், திரு. R.S.சந்திரன்
பி.ப. 2மணி முதல் பி.ப.5 மணி வரை
16.04.2004 வெள்ளி : தமிழ் - திரு.N.சத்தியவேந்தன்
மு.ப.9 மணி முதல் 12மணி வரை
17.04.2004 - சனி : புவியியல் - செல்வி கந்தசாமி
மு.ப.9மணி முதல் 12 மணி வரை
நாடகமும் அரங்கியலும் - இ.ஜெயரஞ்சினி
பி.ப.2மணி முதல் 5மணி வரை
18.04.2004 ஞாயிறு : இந்துநாகரிகம்- திரு.T.ஸ்ரீஸ்
பி.ப. 2மணிமுதல் 5மணி வரை

**கணித/விஞ்ஞானப்பிரிவு**

காலம்:16.04.2004 வெள்ளி
இடம்:மானிப்பாய் மகளிர் கல்லூரி
இணைந்த கணிதம் - திரு.S.றஜனிகாந்
மு.ப.9மணி முதல் 12மணி வரை
உயிரியல் - திரு.S.தயாபரன்
மு.ப.9மணி முதல் 12மணி வரை
பௌதிகவியல் - திரு.தயாளன்
பி.ப.12.30மணி முதல் 3.30 மணி வரை

யாழ்.முன்னணி ஆசிரியர்களினால் நடத்தப்படும் இக்கருத்தரங்கில் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களையும் பங்குபற்றி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு:அனைத்துப் பாடங்களுக்கும்
குறிப்புக்கள் அடங்கிய கையேடுகள் வழங்கப்படும்.

- செயற்றிட்ட இயக்குநர்.

விளம்பர அனுசரணை: **ஐடியல் அக்கடமி**
சண்டிலிப்பாய். கிளை: காரைநகர்.
★ தரம் 3முதல் A/L வரை
★ O/L DAY CLASS
நிர்வாகியும் கணித ஆசிரியருமான
திரு.V.N.பத்மநாதன்.



## கொக்குவில் லயன்ஸ் கழகம் 11.04.2004 இல் நடத்திய

We Serve

# அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்பு முடிவுகள்

பரிசுபெற்ற இலக்கங்கள் வருமாறு:
முதலாம் பரிசு இல. 2849
இரண்டாம் பரிசு இல. 2543
மூன்றாம் பரிசு இல. 3287

10 ஆறுதற் பரிசுகளுக்குரிய இலக்கங்கள்:

| | |
|---|---|
| 2414 | 1900 |
| 1194 | 1097 |
| 3503 | 1249 |
| 2871 | 0649 |
| 1602 | 2392 |

தலைவர்,
(30817) (40-16-17-37) கொக்குவில் லயன்ஸ் கழகம். கொக்குவில்.


## நெஞ்சை நெகிழ்டும் ஓராண்டு நினைவலைகள்

மண்ணின் மடியில்
15
10
1989



ஆண்டவன் அடியில்
14
04
200.

## ஆறுமுகராசா சுஜேந்தன்

(டிறிபேர்க் கல்லூரி மாணவன்
திதி: 02.06.2004

ஒரு நொடியில் எமைப்பிரிந்து ஓராண்டு மறைந்ததுவே!
நெருடுகிறது எம் மனது தேடுகின்றோம் தேசமெங்கும்
வருவாயா என எண்ணி வாசலையே பார்த்திருப்போம்
பெருகுகிறது அருவியாய் எம் கண்ணில் புதுவருடம் பிறக்கையிலே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சங்கம் வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (சி-34464) (24-11-17-37)
அப்பா, அம்மா,
அக்கா, தம்பி.

## இலங்கை வங்கி புத்தாண்டு நிகழ்ச்சி

இன்று புதன் கிழமைகாலை 9 மணிக்கு இலங்கை வங்கியின் யாழ். மேற்றரக்கிளையில் புத்தாண்டு நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

ஏதாவது ஒருகணக்கில் ரூபா 2,500 ரூபாவுக்கு மேல் வைப்பிலிடும் வாடிக்கையாளருக்கு சீட்டிழுப்பு ஒன்று நடத்தப்பட்டு சேமிப்புச்சான்றிதள்கள் விஷேடபரிசாக வழங்கப்படவுள்ளன.

இதேவேளை கொடுக்கல் வாங்கல் செய்யும் வாடிக்கையாளருக்கு பத்து ரூபா நாணயக்குற்றி ஒன்றும் கைவிசேடமாக வழங்கப்படும்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை மற்றும் வங்கி அதிகாரிகள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சீனிவாசகம்

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சீனிவாசகம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் கணவரும் காலஞ்சென்ற நல்லையாவின் சகோதரரும் மற்றும காலஞ்சென்ற கந்தையா மற்றும் துரைராசா (முன்னாள் இளைப்பாறிய உதவி அரச அதிபர் கிளிநொச்சி) ஆகியோரின் மைத்துனரும் பற்பனா சிங்கம், கனகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் DR.P.சிவ ஞானசுந்தரம் (ஞானஏழாலை), இரா சலட்சுமி (பண்ணாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பவன், ரஜிந்தன (கொக்குவில் இந்துக் கல்லூரி), பவிதா கீர்த்தா (பண்ணாகம் மெய் கண்டான்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.04.2004) புதன்கிழமை நண்பகல் 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
DR.P.சிவஞானசுந்தரம்
(மருமகன்)
சுதுமலை வடக்கு,
மானிப்பாய். (சி-34467)(37-16-18)


கொம்பியூட்டர்
பொலிமர்
இறபர் முத்திரை
இலவசம்
ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு
யசோ,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(30331)(38)




ராஜா யாழ்ப்பாணம்




இந்தியா. இலங்கை புதியவெளியீடு
16 முதல் விஜய் நடித்த கில்லி



நிறைஞ்சனாஸ் சங்கானை




காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே)
விசேட காட்சியாக இரவு 9.00 இற்கு
கமல் நடித்த இந்தியன்
(C/34420) (1



நாகம்ஸ் சுன்னாகம்

3 ஆவது வெற்றிவாரத்தை நோக்கி...
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடாக
விஜய், சிம்ரன், விவேக்,
தலைவாசல் விஜய் மற்றும் பலர் நடித்த
A.R.

உதயா




காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00, 10.00 (பி.நே.)
(C-34180) (12)


# மரண அறிவித்தல்கள்

விஸ்வப்பிரம்மஸ்ரீ

## சின்னத்துரை நவரத்தினம்

(அதிபர், ஸ்ரீமுருகன் கனகசிற்பாலயம்,மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை)



யாழ்.காங்கேசன்துறை, மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் வன்னி மாவட்டம் முதலாம் யூனிற் மல்லாவியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை நவரத்தினம் யாழ். இருபாலையில் 12.04.2004 திங்கட்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசிரியர் சின்னத்துரை-அன்னப்பிள்ளை தம்பதியினரின் ஏக புதல்வனும், சிற்பாசாரி கனகசபை-இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் தவமணிதேவியின் அன்புக் கணவரும், செல்வாம்பிகை, செல்வேந்திரன் (டோகா), செல்வஸ்ரீ, செல்வ மனோகரி, செல்வசுதன் ஆகியோரின் பாசமிகுதந்தையும், யோகேஸ்வரி, சறோஜினிதேவி, இராஜலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், சிவரத்தின சிங்கத்தின் (டோகா) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.04.2004) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இருபாலையில் உள்ள இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இருபாலை இந்துமயானத்திற்கு எடுத்துச செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

த. முகவரி,வீபத்திரர் கோவிலடி,
பழைய வீதி,கோப்பாய் தெற்கு,
கோப்பாய். T.P. 7258 (30848)(16-17-37)
தகவல்:
க.இராசலிங்கம்(மருந்தன்)
மைத்துனர்.

## செல்வி நிதர்ஷா விவேகானந்தன்

கனடாவை வசிப்பிடமாகக் கொண்ட செல்வி நிதர்ஷா விவேகானந்தன 12.04.2004 திங்கட்கிழமை கனடாவில் காலமானார். அன்னார் விவேகானந்தன் -கலாநிதி தம்பதிகளின் அன்பு மகளும் சுதர்சன், அனுசன் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார். இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

NO.1,கலாசாலை வீதி,
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம். (30842)(17-16-37)
தகவல்:
சி.நீலாதாட்சி (பேர்த்தி)

## பண்டாரம்பிள்ளை சின்னையா

(இளைப்பாறிய R.M.P.)

தையிட்டி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட பண்டாரம்பிள்ளை சின்னையா அவர்கள் நேற்று 13.04.2004 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் கிருஸ்ணபிள்ளை, காலஞ்சென்றவர்களான நாகம்மா, சின்னம்மா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற அன்னலட்சுமி, காலஞ்சென்ற தம்பிஐயா (R.M.P), தமாலாணர் (இளைப்பாறிய இ.போ.ச. ஊழியர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.04.2004) புதன்கிழமை மதியம் 1.00 மணிக்கு 'கற்பகச்சோலை' G.P.S.றோட் கல்வியங்காட்டில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

'கற்பகச்சோலை',
G.P.S. றோட்,கல்வியங்காடு. (30849)(17-16-37)
தகவல்:
சுந்தரேஸ்வரன்.

## திருமதி சொலமன் மரியம்மா

அரசடி வீதி, நவாலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சொலமன மாியம்மா அவர்கள் நேற்று(13-04-2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செபமாலை சொலமனின் அன்புப் பாரியாரும் இன்பராசா, செந்தாமரைச் செல்வி,டெய்சிராணி,ஆனந்தராஜா,காலஞ்சென்ற அருள்ராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் தவராஜசேகரம்(ஊ.பி.சபை) சந்திரகுலசிங்கம்,மலர்செல்வி, அனுசா ஆகியோரின் அன்பு மாமியாரும் டயஸ், ரமணன்,றம்மியா,சுகன்யா,நதியா,கஜரூபன்,அஸ்கிற்,ஜென்சி,லக்சன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திருமதி சிவஞானசேகரம் திரேசம்மாவின் சகோதரியும ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14-04-2004) புதன்கிழமை 2.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து நவாலி சென்பீற்றர் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நவாலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
நவாலி தெற்கு. (30844)(17-16-37)
தகவல்:
செ.ஆனந்தராஜா (மகன்)

## செல்லத்துரை வைத்திலிங்கம்

மாதகலைச் சேர்ந்த செல்லத்துரை வைத்திலிங்கம் நேற்று(13-04-2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் காந்திமதி தம்பதியின் மூத்த மகனும் சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும் முத்துலிங்கம்(கனடா),தர்மலிங்கம்(லண்டன்) ஆகியோரின் சகோதரரும் அன்னலட்சுமி (கனடா), இந்திரா (லண்டன்),லோகேஸ்வரன் (புத்தளம்),பரமேஸ் வரன் (சுன்னாகம்) ,செல்வரத்தினம் (கொக்குவில்),சிவஞானம் (கரவெட்டி), இராசமலர் (சுன்னாகம்) ,விக்னேஸ்வரன் (பிறவுண் வீதி) ஆகியோரின் மைத்துனரும் மயூரன் (கனடா), கோபிநாத் (கனடா) ,நிஷாந்தன்(கனடா) ,சங்கீதா (லண்டன்), வாணி (லண்டன்)ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-04-2004) புதன்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாதகல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புனித அந்தோனியார்வீதி,
மாதகல். (30847)(17-16-37)
தகவல்:
வை.சகுந்தலாதேவி
(மனைவி).

## பெரியதம்பி பொன்னுத்துரை

(முன்னாள் டொலர் அலுமினியத் தொழிற்சாலை ஊழியர்)

பொயிட்டியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பெரியதம்பி பொன்னுத்துரை அவர்கள் 13.04.2004 செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் குமாரமங்கள தேவன், குமாரதேவி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்திய சாலை), அனந்தவல்லி (ஆசிரியை,யா/மெய்கண்டான் வித்தியாசாலை காரைநகர்), ஞானசேகரம், குமாரலிங்கம், சந்திரசேகரம் (யாழ்.பல்கலைக் கழக கலைப்பீட இறுதியாண்டு மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகேஸ்வரன் (அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம), ஜெயக்குமாரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கிஷானி, பிரதீபன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.04.2004 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய பொலிஸ்நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (30845)(17-16-37)
தகவல்:
குடும்பத்தினர்.

## வடபகுதி மக்கள் திரும்புகின்றனர்

மட்டக்களப்பு,ஏப்.14

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட சகஜநிலையை அடுத்து, இடம்பெயர்ந்த வடபகுதித் தமிழர்கள் தமது இடங்களுக்குத் திரும்புகின்றனர்.

கருணா குழுவின் அறிவிப்பை அடுத்து வடபகுதியைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் பேர் வெளியேறியிருந்தனர்.

கிழக்கில் சகஜநிலை ஏற்பட்டதை அடுத்து அவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் நேற்றுத் தமது இடங்களுக்குத் திரும்பினர். அவர்கள் தமது வீடுகளைச் சுத்தம் செய்யும் பணியில ஈடுபட்டிருந்தனர்.

அதேவேளை,

மட்டக்களப்பில் இருந்து வெளியேறிய நூற்றுக்கு மேற்பட்ட யாழ்ப்பாணத்தவரான வர்த்தகர்களில் 25 இற்கு மேற்பட்டவர்கள் திரும்பியுள்ளனர். அவர்களில் சிலர் தமது கடைகளை நேற்றுத்திறந்து வியாபாரத்தை ஆரம்பித்திருந்தனர். (ம-3-21)



மட்டு. - அம்பாறை விடுவிக்கப்பட்ட பகுதிகளில் விடுதலைப் புலிகளின் மகளிர் அணி போராளிகள் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

# அமைச்சு ஒதுக்கீடுகள் தொடர்பாக சு.கட்சி-ஜே.வி.பி. இன்று சந்திப்பு

கொழும்பு,ஏப்.14

அமைச்சு ஒதுக்கீடுகள் தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்களைச் சுமுகமாகத் தீர்க்கும் வழிமுறைகள் தொடர்பாக ஆராய சுதந்திரக்கட்சி மற்றும் ஜே.வி.பி. கட்சிகளின் தலைவர்கள் இன்று பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் கூடுகின்றனர்.

ஏற்கனவே உறுதிமொழி வழங்கியபடி தமது கட்சியினருக்கு அமைச்சுக்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து அமைச்சர்கள் பதவியேற்பு வைபவத்தை புறக்கணித்தது ஜே.வி.பி.

தாங்கள் கேட்டுக்கொண்டபடி அமைச்சுக்களை வழங்கினால் மட்டுமே அமைச்சுப் பதவிகளை ஏறகமுடியும் என்றும் ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

இந்தச் சிக்கல் தொடர்பாக ஆராய்ந்து முடிவுகளை மேற்கொள்ள இரு கட்சிகளின் தலைவர்களும் இன்று கூட இருக்கின்றனர்.

இரு கட்சிகளும் இணைந்து அமைத்துள்ள ஆறு உறுப்பினர்கள் கொண்ட நடவடிக்கைக் குழுவின் உறுப்பினர்களே இன்று கூட இருக்கின்றனர் என்றும் -

சிக்கலைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்போம் என்றும் - அமைச்சரும் நடவடிக்கைக் குழுவின சுதந்திரக்கட்சி சார்பிலான குழுவின் தலைவருமான பிரேமஜயந்த தெரிவிததார். (ம-3)

## விசேட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு-கிழக்கில் அரச படையினரின் பாவனைக்காக இவை உருவாக்கப்பட்டுள்ளன. இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல இந்த பவள் கவச வாகனங்களை சம்பிரதாயபூர்வமாக விசேட அதிரடிப்படையின் தளபதி பிரதிப் பொலீஸ் மா அதிபர் நிமல் லூகேயிடம் கையளிப்பார். இராணுவ தலைமையகத்தில் இந்த நிகழ்வு இடம் பெறும்.

இந்த பவள் கவச வாகனங்கள் ஒவ்வொன்றும் 30 லட்சம் ரூபா பெறுமதியானவை. இதற்கு முன்னர் அரச படையினரின் பாவனைக்காக தென்னாபிரிக்காவில் இருந்து இத்தகைய கவச வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. (ம)

## எதிர்க்கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகராக செயற்படுவது, எமது எதிர்கால நடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும். இதன் காரணமாக எதிர்க்கட்சி நிறுத்தும் வேட்பாளருக்கே ஆதரவு வழங்குவோம்" - என்றார் அவர்.

இந்த விவகாரம் தொடர்பாகக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழு கூடி இறுதி முடிவை எடுக்கும் என்றும் அவர் கூறினார்.

அதேசமயம் -

கடந்த அரசில் பௌத்த விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்து பௌத்த மதத்துக்கு ஆற்றிய சேவையைக் கருத்தில் கொண்டு லொக்கு பண்டாரவுக்கு ஆதரவு வழங்குவது என்று தேசிய ஹெல உறுமயவும் முடிவு செய்திருக்கின்றது என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (ம-3)

## கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

18 வயதுக்குக் குறைந்த சிறுவர்களான 55 ஆண்களும் 113 பெண்களும் காலை 10.00 மணியளவில் 'யுனிசெவ்' அமைப்பின் பிரதிநிதியூடாக அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் மட்டு. - அம்பாறை தளபதி ராம், மட்டு - அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் தியாகராஜா மற்றும் சமாதானச் செயலகத்தின் பிரதி இயக்குநர் பவானந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதற்கு முன்னரும் இவ்வாறு பல நூற்றுக்கணக்கான போராளிகள் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று விடுதலைப் புலிகள் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர். (ம)

## எதிர்கால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவருடனும் தாம் தொடர்பு கொண்டு பேசியதாகவும்-

எமது தலைமையின் கட்டுப்பாடுகள், கொள்கைகளின் அடிப்படையில் செயற்பட அவர்கள் உறுதி கூறியுள்ளனர் என்றும் - அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் கூட்டங்களில் பங்கேற்பதன் மூலம் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து அவர்கள் செயற்படுவர் என்றும் மாவை சேனாதிராசா தெரிவித்தார். (ம-3)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரும் வாகனங்களில் வாழைச்சேனை - பொலனறுவை வீதி வழியாக விரைந்து சென்றதை நாலாம் முச்சந்தியில் தாங்கள் கண்டனர் என்று பொதுமக்கள் சிலர் தளபதிகளிடம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

கருணா இராணுவத்தினரின் முகாம் எதிலாவது பதுங்கி இருக்கக கூடும் என்று விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரும் கிழக்கின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளருமான கரிகாலன் சுவிற்சர்லாந்தில் இருந்து தெரிவித்துள்ளார்.

"கருணா தனக்கு விசுவாசமான 15 பேருடன் மட்டக்களப்பில் இருந்து வெளியேறி உள்ளார். அவர்கள் இப்போது படையினரின் முகாமில் பாதுகாப்பாக இருக்கலாம் என்று கருதுகின்றோம். ஏற்கனவே கருணாவுக்கு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவுடன் தொடர்பு இருந்தது. அந்த அடிப்படையிலேயே இதனை ஊகிக்கின்றோம்" - என்று தெரிவித்தார் அவர்.

கருணா என்ற தனிமனிதனுக்குப் படைத்தரப்பு புகலிடம் வழங்குவதால விடுதலைப் புலிகளுக்கு எந்தவிதத் தாக்கமும் ஏற்படப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-9)

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் கந்தசாமி துஷ்யந்த் (துஷி)



ஒட்டுமடம் தேவாலய ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி துஷ்யந்த் (துஷி) கடந்த (11.04.2004) ஞாயிற்றுக் கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

இவர் கந்தசாமி(முன்னாள் ஊழியர், ஈழநாடு)-இராஜரஞ்சினியின் அன்புப் புதல்வனும் ரமணன் (சுவிஸ்), வானதி(பிரான்ஸ்), வாசுகி(லண்டன்) ஆகியோரின் சகோதரனும் ஆனந்தி(சுவிஸ்), தில்லை நடராசா (பிரான்ஸ்), சிதம்பரலிங்கம்(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் லக்ஷனாவின் (சுவிஸ்) அன்புச் சித்தப்பாவும், தர்சிகா, சஞ்சிகா,கயானன்(பிரான்ஸ்), துளசிகா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.04.2004)புதன்கிழமை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்.கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல.29/29,தேவாலய ஒழுங்கை,<br>ஒட்டுமடம் யாழ்ப்பாணம். (30851)(16-17-18)

தகவல்:<br>கந்தசாமி(தந்தை).

## திருமதி அன்னரத்தினம் கந்தையா

யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னரத்தினம் கந்தையா அவர்கள் நேற்று (13.04.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - ரேவதிப்பிள்ளை தம்பதியினரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற கதிரவேற்பிள்ளை கந்தையாவின் பாசமிகு மனைவியும் சித்திரா(உபஅதிபர்-திருக்குடும்பக் கன்னியர் மடம்,யாழ்ப்பாணம்), சத்தியபாலன்(கனடா), இளங்கனி(கனடா) ஆகியோரின அன்புத் தாயாரும் இராஜரட்ணம்(பணிப்பாளர்-உயர்தொழில் நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம்), மங்களேஸ்வரி(கனடா), கலாதரன்(கனடா) ஆகியோரின் மாமியாரும் நர்மதா(தேசிய சேமிப்புவங்கி . யாழ்ப்பாணம்), சுரனுதா(மருத்துவபீடம்-முதலாம் வருடம்) ஆரணி, ரிஷில் சுசாந்தன், ரோபிதா (கனடா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.04.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

370, கோவில் வீதி,<br>நல்லூர், ,யாழ்ப்பாணம். (30850)(16-17-18)

தகவல்:<br>த. இராஜரட்ணம்<br>(மருமகன்).


விக்னா<br>கல்வி நிறுவனம்<br>பிரிவு 4<br>O/L DAY CLASS

ஆரம்பம்: 16.04.2004<br>(8.30 - 2.00)

★ பிரிவு 3 இற்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது.<br>★ பிரிவு 5 மிக விரைவில்<br>★ இவ் வருடம் 6 பிரிவு மட்டுமே.

(சி-34461)

A/L பரீட்சைக்கான<br>வழிகாட்டல் கருத்தரங்கு

நாடகமும்<br>அரங்கியலும<br>15.04.2004 வியாழன் 9 மணி<br>புதிய உயர் கல்லூரி<br>ஆரியகுளம்.<br>BY:P.கணேசராஜா<br>B.A.(Hons)<br>(30798)

SPOKEN ENGLISH<br>WITH<br>GRAMMAR<br>LECTURES BY:<br>Mr.M.A.HARI<br>புதிய பிரிவு ஆரம்பம்<br>14.04.2004 புதன் மாலை 3 மணி<br>WEDNES DAY, MON DAY } 3 p.m.-4 p.m.<br>HARY'S INSTITUTE<br>இல.564, கஸ்தூரியார் வீதி<br>(யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)<br>யாழ்ப்பாணம்.<br>(30821)

பொருளியற்<br>கல்லூரி<br>யாழ்.<br>புவியியல்<br>கருத்தரங்கு<br>15.04.2004 வியா. 8 மணி<br>16.04.2004 வெள். 8 மணி<br>P.S. குமரன்<br>B.A.(Hons)<br>வெளிமாணவர்களும்<br>பங்குபெறலாம்.<br>(30797)

IIS<br>விசேட பிரிவுகள் ஆரம்பம்<br>பிரிவு I :23.04.2004 பிரிவு II :24.04.2004<br>Diploma in Microsoft Office<br>Diploma in Desk Top Publishing<br>மாணவர்களே இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி உங்கள் அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.<br>இயக்குநர்<br>IIS. யாழ்ப்பாணம்.

BEACON<br>யாழ்.நகர்<br>A/L 2006<br>புதிய பிரிவு<br>ஆரம்பம்:-17.04.2004<br>சனி காலை 8மணி (ப.நே.)<br>எமது ஆசிரியர் குழு:<br>LOG. : S.S.மனோகரன்<br>TAMIL : நாக.தமிழிந்திரன்<br>HC. :T.ஸ்ரீஸ்<br>GEO. :S.R.பாலா<br>DRA. :T.J.சுதன்<br>CRI. :மல்லிகா<br>ECO. :P.மோகன்<br>ENG. :சிறிமாஸ்டா (30796)

BEACON யாழ்.<br>A/L தமிழ்<br>பரீட்சை வழிகாட்டல்<br>கருத்தரங்கு - 2004<br>காலம்: 18.04.2004<br>காலை 9 மணி<br>Note:<br>1. இலங்கையில் முன்னணி ஆசிரியர்கள் பங்கேற்பர்<br>2. வழிகாட்டற் கையேடுகள், புத்தகங்கள் வழங்கப்படும்.<br>3. அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை.<br>பதிவுகளை 17 ஆம் திகதிக்கு முன்பு செய்யவும். (30793)(17)

கிறிஸ்தவபாட மீட்டல் கருத்தரங்கு<br>2004 இல் க.பொ.த. உ/த.பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கானது<br>இடம்: அகவொளி குடும்பவளத்துணை நிலையம்<br>(யாழ்.பேராலயம் அருகில்)<br>காலம்: இம்மாதம் 16ஆம், 17 ஆம் திகதிகளில<br>(வெள்ளி, சனிக்கிழமைகளில்)<br>நேரம்: காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை<br>யாழ் முன்னணி ஆசிரியர் குழுவினால் நடத்தப்படும் .<br>இக்கருத்தரங்கில் பங்குபற்றி பயன் அடையுமாறு அழைக்கிறோம்.<br>இளைஞர் உருவாக்கல் இயக்கம்.<br>யாழ் பேராலயம். (30811)





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.